பெருநிலம்

# பெருநிலம்

## தீபச்செல்வன் (1983)

இயற்பெயர் பாலேந்திரன் பிரதீபன். ஈழத்தின் வடக்கில் வன்னியில் கிளிநொச்சி நகரத்திலுள்ள இரத்தினபுரத்தைச் சேர்ந்தவர். ஈழத்தின் நான்காம் கட்டத்தில் இடம்பெற்ற போர்பற்றி பிரக்ஞை பூர்வமாக எழுதியிருக்கிறார். கவிதைகளுடன் கதைகள் மற்றும் பத்தி எழுத்துகளையும் எழுதி வரும் இவர் விமர்சனம், புகைப் படம் மற்றும் ஆவணப்படம் முதலிய துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர்.

தீபம் என்ற வலைப்பதிவில் ஈழ அரசியலின் சமகால நிலவரங் களைத் தொடர்ந்து எழுதி வரும் இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ் சிறப்புப் படிப்பை நிறைவு செய்திருக்கிறார். தற்பொழுது யாழ் பல்கலைக்கழக ஊடக நிலையத்தில் இதழியல் பயிற்றுவிப்பு ஆசிரியராகப் பணியாற்றுவதுடன் சுயாதீன ஊடக வியலாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

‘பதுங்குகுழியில் பிறந்த குழந்தை’, ‘பாழ் நகரத்தின் பொழுது’ என்ற கவிதைத் தொகுதிகள் காலச்சுவடு பதிப்பக வெளியீடாக வந்துள்ளன.

மின்னஞ்சல்: deebachelvan@gmail.com

வலைப்பதிவு: http://deebam.blogspot.com

தொலைபேசி: +094772487257

## ஆசிரியரின் பிற நூல்கள்

- பதுங்குகுழியில் பிறந்த குழந்தை (2008)
- ஆட்களற்ற நகரத்தை தின்ற மிருகம் (2009)
- பாழ் நகரத்தின் பொழுது (2010)
- ஈழம் மக்களின் கனவு (2011)

## தீபச்செல்வன்

# பெருநிலம்

காலச்சுவடு பதிப்பகம்

பெருநிலம் ✦ கவிதைகள் ✦ ஆசிரியர் : தீபச்செல்வன் ✦ © தீபச்செல்வன் ✦ முதல் பதிப்பு : மே 2011 ✦ வெளியீடு: காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., 669 கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001.

காலச்சுவடு பதிப்பக வெளியீடு: 389

**perunilam** ✦ Poems ✦ Author : thEpacelvan ✦ © Deebachelvan ✦ Language : Tamil ✦ First Edition : May 2011 ✦ Size : Demy 1 x 8 ✦ Paper : 18.6 kg maplitho ✦ Pages: 80.

Published by Kalachuvadu Publications Pvt. Ltd., 669 K.P. Road, Nagercoil 629 001, India ✦ Phone : 91 - 4652 - 278525 ✦ e-mail : publications@kalachuvadu.com ✦ Wrapper Printed at Print Specialities, Chennai 600 014 ✦ Printed at Mani Offset, Chennai 600 005.

ISBN : 978-93-80240-43-5

05/2011/S.No. 389, kcp 677, 18.6 (1) 300

பெருநிலத்திற்காய்த் தவிக்கும்
டெனிஷா போன்ற குழந்தைகளுக்கும்
பெருநிலத்தில் காணாமல்போன
கஜானந் போன்றவர்களுக்கும்

# நன்றி

*அம்ருதா, இருக்கிறம், சங்கதி, வடக்குவாசல், தீராநதி, உயிர்மை, அகநாழிகை, தீபம், யாழ் இணையம், தமிழரங்கம், வினவு, வார்ப்பு, பொங்குதமிழ், சிக்கிமுக்கி, கீற்று, குளோபல் தமிழ் செய்திகள், தமிழரங்கம், ஆனந்தவிகடன்*

# பொருளடக்கம்


*என்னுரை* 11

சாம்பலாக்கப்பட்ட நிலத்தின் நடுவிலிருக்கிற சிதைக்கப்பட்ட நகரம் 17

அகாலத்தில் உறங்குகிற பெருநிலம் 21

உன்னைத் தின்று போட்டிருக்கிறார்கள் 22

முன்பொரு காலத்தில் இந்த நிலம் எங்களிடமிருந்தது 24

அப்பத்தின் கதை பற்றிய இரண்டாவது உரையாடல் 26

இறுதிநாள் வழியில் தொலைந்தவர்கள் 28

நிழலற்ற நகரத்தில் கால் பதித்த நாள் 30

அந்தச் சிறுவன் திரும்பி வருவான் 32

நிலத்தின் காயம் 34

அம்மா திரும்பியிருக்கிற ஆற்றங்கரை காணி நிலம் 36

கொலைக் காட்சிகளின் நிழல் 38

ஆதிக்கத்தின் அபாயம் படிந்திருக்கிறது 42

படரும் துயர் நிழல் 44

போரின் குழந்தைகள் 46

எருக்கலைப் பூநிலம் 48

மலைச் சிறுவர்கள் 49

போர்நிலம் 50

யாருடைய எலும்புக்கூடுகள்? 52

நிலக்கனவு 54

| | |
|---|---|
| கொலையுண்ட நிலம் | 56 |
| பேய் கொன்ற நிலம் | 57 |
| கிழக்கில் கிடந்த பச்சைச் சூரியன் | 58 |
| இடர்நிலம் | 60 |
| எனது நிலத்திற்காகப் பிரார்த்தியுங்கள்! | 62 |
| யாழ்நிலம் | 64 |
| உள் நுழைய அஞ்சும் நகரின் தெருக்கள் | 68 |
| தலைநிலத்தில் மலைகளைத் தின்னும் பேய்கள் | 72 |
| குருதிக்கடல் நிலத்தின் பெருங்காற்று | 74 |
| உறங்காதநிலம் | 76 |
| கொலைக்கால நகரத்தின் குறிப்புகள் | 78 |

என்னுரை

# நிலத்திற்குத் தவிக்கும் காலம்

*தமிழ் இலக்கியத்திலும் தமிழர் வாழ்விலும் நிலம் பற்றிய பதிவுகள் முக்கியமானவை. சங்க காலத்தில் அதிகாரம் மற்றும் சாதியமைப்பின் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்த நிலம் பற்றிய விபரிப்புக்களுடன் நிலத்துடன் இணைந்த உணர்வு பற்றிய இலக்கியங்களும் தமிழ் இனக் குழுக்களின் வரலாற்றைப் பதிவு செய்துள் ளன. இனக் குழுமங்கள் நிலங்களை அடிப்படையாகக் கொண்டே தனித்துவமான வாழ்க்கையையும் பூர்வீகமான வரலாற்றையும் அமைத்திருக்கின்றன. ஈழத்திலும் தமிழ் மக்கள் காலம் காலமாக வரலாற்றுபூர்வமாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கு ஆதாரமான வரலாற்றுத் தள மாக ஈழத்து நிலம் விரிந்திருக்கிறது. அந்த நிலத்திற் காகவே ஈழத்து மக்கள் அறுபதாண்டு காலத்திற்கு மேலாகப் போராடி வருகிறார்கள். அந்த நிலத்தை அப கரிக்கவும் ஈழத்தமிழர்களுக்குரிய நிலத்தின் அடையாளங் களை அழிக்கவும் இன்று இலங்கை அரசும் அதன் இராணுவமும் தமிழ் ஈழ நிலத்தில் எமது மக்கள்மீது நிகழ்த்தும் அடக்குமுறைகள் மிகக் கொடுமையான அவலங்களை உருவாக்கியுள்ளன.*

*நலிந்துபோன சனங்களின் வேர்களையும் அவர் களின் இருப்புக்களையும் நிலத்திலிருந்து பிடுங்கி எறி கின்ற அபாயம் மிக்கவையாக ஈழத்து நிலம்மீதும் மக்கள் மீதுமான நில அதிகாரத்திற்கான போர் நடைபெறுகிறது. ஈழப் போராட்டத்தின் ஆயுதப் போராட்டம் சிதைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளைக் கடக்கும் நிலையில் நிலம்*

முற்றாக ஆக்கிரமிப்பாளர்களின் கைகளில் ஆக்கிரமிக்கப்பட்ட நிலமாக இருக்கிறது. ஈழப் போராட்டம் நிலத்திற்கான போராட்டமாக வெடித்து எழுந்திருந்தது. ஈழத்துப் போரும் அரசியலும் நிலம் என்கிற மையத்திலிருந்தே விரிகிறது. அதே நிலத்தை அந்த நிலத்திற்குரிய அடையாளங்களை அதன் வார்த்தைகளை இன்று ஆக்கிரமிப்பாளர்கள் சிதைக்கும் சூழ்ச்சிகளுடன் முற்றுகையிட்டிருக்கிறார்கள்.

இராணுவ அதிகாரமும் சிங்களப் பெருந்தேசிய அடக்குமுறையும் சுற்றி வளைத்து அதிகாரத்தைச் செலுத்தும் சூழலில் அவலமும் பயங்கரங்களும் நிறைந்த நிலத்திலிருந்து வார்த்தைகள் முளைத்திருக்கின்றன. கனவும் உயிர்களும் எந்த நிலத்திற்காக அலைகின்றனவோ அந்த நிலத்திலிருந்து வார்த்தைகள் கிளம்பியிருக்கின்றன. மிக வேகமாக நிலம் தின்னும் இன்றைய காலத்தில் வாழ் நிலத்திற்காக எங்கள் மக்கள் எத்தகைய அவலம்மிகு தருணத்திலும் போராடத் தயாராக இருக்கிறார்கள் என்பதுதான் இன்றெமது மக்கள் நிலம் மீதெழுதும் செய்தியாயிருக்கிறது. ஈழக் கனவைத் துடைக்க எல்லா விதமான பயங்கரங்களும் நிகழ்த்தப்பட்ட நலிந்த சனங்கள் வாழும் நலிந்த நிலத்தில் நிலம் மீதான பிரக்ஞையும் ஈழம் என்கிற கனவும் அடையாளங்களும் உயிரோடு தான் இருக்கின்றன. ஈழத்து நிலத்தோடு முக்கியமாக வன்னிப் பெருநிலம் பற்றிய இன்றைய கால நெருக்கடிகளை வரலாற்றுக் கனவுகளோடு இந்த நூல் பேச முயல்கிறது.

வன்னிப் பெருநிலம் ஈழத்துப் போராட்டத்தில் பல தடவைகள் போரை எதிர்கொண்ட ஒரு பெரும் நிலப்பகுதி. தமிழ் ஈழத்தில் மிகப் பெரிதாக விரிந்த நிலப்பகுதியாகவும் தமிழர்களின் இருதய பூமியாகவும் முக்கியம் பெறுகிறது. வரலாறுதோறும் அடங்காத நிலம் என்றுதான் வன்னிப் பெருநிலம் அடையாளப்படுத்தப்படுகிறது. மேலை நாட்டு ஆக்கிரமிப்பாளர்களின் காலத்திலும் சிங்கள அரசர்களின் காலத்திலும் அடங்காத நிலமாக வன்னியின் வீரம் பற்றிய சித்தரிப்புக்களின் வரலாற்றுக் குறிப்புக்களில் உள்ளன. வெள்ளைக்காரப் படைகளுடன் போரிட்ட மாவீரன் பண்டாரவன்னியன் முதல் சிங்களப் படைகளுடன் போரிட்ட தலைவர் பிரபாகரன்வரையாக வன்னி அடக்குமுறைக்கு எதிரானவர்களின் போர்க்களமாகவே விரிந்திருந்தது. ஒட்டுமொத்த தமிழர்கள்மீதான அடக்குமுறைக்கு எதிராகவும் தமிழர்களுக்கான கனவுக்குமாக வன்னிப் போர்க்களம் விரிந்திருந்தது. இத்தகைய வீரம் செறிந்த வரலாற்றின் அடிப்படையில் ஈழப் போராட்டத்தின் பரிமாணங்களின் பிறகும் வன்னி முக்கிய இடத்தை வகித்தது.

வன்னியின் முக்கிய இடங்கள் பலவும் ஈழத் தமிழர்களின் பூர்வீக நிலங்கள். காலம் காலமாக ஈழத் தமிழர்கள் வாழ்ந்து வந்தமைக்கான சான்றுகள் நிரம்பிய வரலாற்றுத் திட்டுக்கள் எனத் தக்க வகையில் ஆதிக்கதைகளும்; புராதானங்களும் புதைந்துள்ளன. பூநகரி, அக்கராயன், உருத்திரபுரம், முள்ளியவளை, கனகராயன்குளம், முல்லைத்தீவு போன்ற பல நிலங்கள் ஈழத் தமிழர்கள் காலம் காலமாக வாழ்ந்த பூர்வீக நிலங்களாகும். ஏனைய பல நிலங்கள் நூற்றாண்டுகளைக் கண்ட விவசாய நிலங்களாகும். கிளிநொச்சி, முல்லைத்தீவு, பூநகரி போன்ற பட்டினங்களும் பூர்வீகமானவை. ஒட்டுமொத்த ஈழத்து நிலத்தின் பூர்வீகங்களுடன் வன்னிப் பெருநிலத்தின் பூர்வீகமும் தமிழ் ஈழ வரலாற்றில் ஆழமான கால்களைப் பதித்திருக்கிறது. 1990களில் விடுதலைப் புலிகள் வன்னிக்கு நகர்ந்ததிலிருந்து வன்னிப் பெருநிலம் அதிகமதிகம் முக்கியத்துவம் பெற்றது. அதற்கு முன்னதாக இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்திலும் போராளிகளைப் பாதுகாத்த பெருமை வன்னிக் காடுகளுக்கு உரியவை. இரண்டாம், மூன்றாம் ஈழப் போர்களில் வன்னி பெற்ற முக்கியத்துவத்தைவிட நான்காம் ஈழப் போரில் வன்னி முக்கிய நிலைகளுக்கு முகம் கொடுத்தது. சூழ்ச்சித்தனம் மிக்க போரால் பேரழிவுகளைச் சுமக்க நேரிட்டது.

மாவிலாற்றில் தொடங்கிய ஈழப்போர் ஒரு கட்டத்தில் வன்னிப் பெருநிலத்திற்குள் பெரியளவில் மூண்டது. மன்னார், மணலாறு, முல்லைத்தீவு, முகமாலை என்று முக்கியக் களமுனைகளால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த வன்னிப் பெருநிலம் 2007ஆம் ஆண்டிலிருந்து பாரிய யுத்தத்திற்கு முகம் கொடுத்தது. சுமார் நான்கு லட்சம் மக்கள் வாழும் வன்னிப் பெருநிலப் பகுதிமீது இலங்கை அரசு தொடுத்த யுத்தம் வன்னியை அவல நிலப்பகுதி ஆக்கியது. எண்ணிக்கை அறியப்படாது பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியாக்கப்பட்டுப் புதைக்கப்பட்ட நிலமாகும். திட்டமிட்ட சூழ்ச்சிகள் திணிக்கப்பட்டு வீழ்ச்சிகள் ஏற்படுத்தப்பட்ட நிலமுமாக மாறியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய கோட்டையாக நான்காம் கட்ட ஈழப்போரில் வகித்த வன்னியை உலகம் மிகவும் சூழ்ச்சித்தனமாக வீழ்த்தியது. கொடும் போராயுதங்கள் கையாளப்பட்டு யுத்தம் நிகழ்த்தப்பட்ட வன்னிப் பெருநிலத்ததில் ஒட்டுமொத்த மக்களுக்காகப் போராடிய ஒரு போராட்ட அமைப்பும் அந்த நிலப்பகுதியில் வாழ்ந்த மக்களும் கொன்றொழிக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டார்கள்.

வன்னிப் பெருநிலமென்பது சுமார் அரை லட்சம் மக்கள் கொன்றும் உயிரோடும் புதைக்கப்பட்டும் ஈழத்திற்காகப்

போராடிய போராளிகள் கொன்றும் உயிரோடும் புதைக்கப்பட்டும் உயிர்கள் விதைக்கப்பட்ட நிலமாகும். போராளிகளுடன் கல்லறைகளும் மக்களுடன் அவர்கள் வாழ்ந்த வீடுகளும் அவர்களின் பொருட்கள் முதலான சொத்துக்கள், மரங்கள், கட்டிடங்கள், பதுங்குகுழிகள் முதலிய வாழிடங்களும் புதைக்கப்பட்டன. புத்தகங்கள், புகைப்படங்கள், வீடியோக்கள், திரைப்படங்கள், பதிவுகள் என்று பல வகையான ஆவணங்களும் புதைக்கப் பட்டுள்ளன. அதனால் வன்னிப் பெருநிலமென்பது ஒரு போராட் டத்தின் அத்தனைக் கூறுகளும் புதைக்கப்பட்ட ஆவண நிலமாகி விட்டது. போரால் முற்றுகையிட்டுள்ள எமது நிலத் தின் பல பாகங்களை இன்று அரசும் அதன் படைகளும் மக்களிடம் கையளிக்கத் தயங்குகின்றன.

மட்டக்களப்பு, திருமலை, யாழ்ப்பாணம், மணலாறு, வவுனியா என்று தமிழர்களின் நிலங்களில் பல பகுதிகளை அரசும் படைகளும் முழுமையாக அபகரித்திருக்கின்றன. திருகோணமலையில் கந்தலாய் உட்படப் பல இடங்கள் சிங்களப் பிரதேசங்களாக மாற்றப்பட்டுள்ளன. தமிழர்களின் தலைநிலம் தலை நகர் எனப்படும் திருமலை இன்று சிங்களவர் களால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. சம்பூர் நிலப் பகுதியை அனல் மின் நிலையம் அமைப்பதற்காய் அரசு அபகரித்து அந்த நிலப்பகுதி மக்களை அகதிகளாக்கியிருக்கிறது. மணலாற்றை முழுமையாக இழந்திருக்கிறோம். யாழ்ப்பாணத் தில் பலாலி, வலிகாமம் வடக்கு, மாதகல், அரியாலை போன்ற பல நிலப்பகுதிகள் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. வன்னி யிலும் பல இடங்களை அரச படைகள் அபகரித்துள்ளன. அபகரிக்கப்பட்ட பகுதிகளிலும் மக்கள் செறிந்து வாழும் பகுதி களிலும் புத்தர்சிலைகளையும் இராணுவ முகாம்களையும் இராணுவ நினைவுத் தூபிகளையும் பெருக்கி சிங்கள இராணுவ மயமாக்குகின்றன. இப்படிச் சிங்கள இராணுவமயமாக்குவது ஒட்டுமொத்த ஈழ நிலமெங்கும் திட்டமிட்டு நடைபெறுகிறது. இது நிலத்திற்கான இன்றைய பிரச்சினைகளுடன் எதிர் காலத்தில் ஈழத் தமிழர்களின் வாழ்வு, வரலாறு, அடை யாளங்கள், அதிகாரங்கள்மீது தாக்குதல்களை நடத்தப் போகின்றன.

மக்களை மீளக்குடியேற விடாமலும் மீளக்குடியேறிய இடங் களை விட்டுப் பெயர்ந்து செல்லுமாறும் படைகளும் அரசாங்கத் தின் ஆணையின்படி அரச அதிகாரிகளும் வற்புறுத்துகிறார்கள். வன்னியின் முக்கிய இடங்கள் பல இப்படித்தான் குறி வைக்கப் பட்டுப் பெரும் அதிர்வுகளை உருவாக்கியிருந்தன. மக்கள் நிலத்திற்காகத் தவித்து அழுது போராடினார்கள். கொதித் தெழுந்தார்கள். ஈழப்போராட்டத்தில் நிலம் எத்தகைய

முக்கியத்துவத்தைப் பெறுகிறது என்பதைப் போருக்குப் பிந்தைய இன்றைய காலத்தில் மக்கள் உணர்த்தி வருகிறார்கள். மக்களோ நிலப் பிரக்ஞை மிக்க வகையில் போராடி நிலத்தை வென்றிருக்கிறார்கள். இன்றைய காலத்தில் ஈழத்து நிலம் என்பது நிலத்திற்காய்த் தவிக்கும் மக்கள் வாழும் நிலமாகவும் நிலத்திற்காய்ப் போராடி வெல்லும் காலமாகவும் அடையாளம் பெறுகிறது. ஆனால் இன்னும் இன்னும் பல நிலப் பகுதிகள் அரசின் கைகளிலும் படைகளின் ஆளுகைகளிலும் பாதுகாப்பு வலயங்களாகவும் மக்கள் நுழையத் தடை செய்யப்பட்ட பகுதி களாவும் இலங்கை அரசின் சிங்களப் பெருந்தேசிய அதிகாரத் தின் கனவு நிலங்களாகச் சிக்கியிருக்கின்றன.

இன்று, நலிந்து காயம் பட்டு நொந்து தோல்வியுடன் ஈழத் தமிழர்கள் வாழும் நிலையில் இந்த நிலம் பற்றிய பிரக்ஞை என்பது எமது குழந்தைகளுக்காகவே அதிகமாய் எழுகிறது. தலைமுறைகளுக்காவே, வாழ் நிலத்திற்காகவே போராட்டம் என்கிற ஈழப் போராட்டத்தின் வெளிப்பாட்டின் அடிப்படையில் இன்றைய ஈழத்து மக்களிடம் நிலம் பற்றிய பிரக்ஞையும் அதற் கான போராட்டமும் அவசியமாகி யுள்ளது. ஒரு ஊடகவியலாள ராகவும் வன்னி நிலத்தின் பாகங்களில் வாழ்கிறேன். மக்களின் நிலப்பிரச்சினைகள் பற்றிய பதிவுகளைப் பல்வேறு நெருக்கடி களின் மத்தியில் எழுத வேண்டியிருந்தது. வன்னிப் பெருநிலத் தில் கிளிநொச்சியில் வாழும் நான் உட்பட எங்கள் கிராம மக்களும் ஒரு முறை எனது கிராமத்திலிருந்து பெயர்ந்து செல் லும் நிலைமைக்குத் தள்ளப்பட்டோம். கடந்த முப்பதாண்டு காலப் போரில் மூன்று தடவைகளுக்கு மேல் இடம்பெயர்ந்து அகதியாக அலைந்த எங்கள் கிராமத்தை அபகரிப்பதற்காய் நிலத்தை விட்டுப் பெயர்ந்து செல்ல அறிவுறுத்தப்பட்டபொழுது ஏற்பட்ட மனத் துயர், விரக்தி என்பன அளவிட முடியாதது. ஆனாலும் நிலத்திற்காக அதிகாரத்தை எதிர்த்து எங்கள் கிராமமும் போராடி வென்றது.

வன்னிப் பெருநிலமும் கிளிநொச்சி நகரமும் என் வாழ்க்கையில் போர்க்கால அலைச்சல்களில் பிரிவுகளில் பல கட்டங்களில் கலந்திருக்கின்றன. எனது சனங்கள் பலரை இழந்து எனது சனங்கள் பலர் நலிவுற்று பிரிவுகளாலும் அவலத்தாலும் இருக்கிற நிலத்தின் உணர்வுத் தாக்கங் களுடன் வாழ்கிறேன். இந்த நிலத்தில் பிறந்து இதே நிலத்தில் ஒரு மாபெரும் கனவுடன் நிகழ்ந்த போராட்டத்துடன் பயணித்த சனங்களில் ஒருவனாக இந்த நிலத்தின் துயரங்களை, பதிவுகளை, உணர்வுகளைப் பதிவு செய்ய வேண்டியதை எனது பெரும் கடமையாக உணருகிறேன். அடக்குமுறை மிக்க ஆக்கிரமிப்பு வாழ்க்கையிலிருந்து வார்த்தைகளைப் படைப்பது

*மிக ஆபத்தானது என்பதை உணர்ந்தபொழுதும் எமது சனங் களின் வார்த்தைகளை நிலம் பற்றிய பிரக்ஞையில் இந்த நூலை எழுத வேண்டியிருந்தது.*

*இந்த நூலில் எமது நிலம் பற்றிய உணர்வுகளை, நிலத்தின் மீதான போரை, நிலத்திற்கான போராட்டத்தை எமது நிலத்திற் குரிய தலைமுறைக்காக எழுதியிருக்கிறேன். நிலம் மறுக்கப் பட்டுத் தவித்த பொன்னகரைச் சேர்ந்த டெனிஷா போன்ற குழந்தைகளுக்கும் பெருநிலத்தின் எனது பிரியமான தோழமை களில் ஒருவனான கஜானந்தைப்போல வன்னிப் போர்க்களத்தில் காணாமல் போனவர்களுக்கும் இந்த வார்த்தைகளைச் சமர்ப்பிக் கிறேன். இன்னுமின்னும் அறியாச் சேதிகள் இந்த நிலத்தில் புதைந்துள்ளன என்றவாறு இன்னுமின்னும் இந்த நிலத்தைப் பற்றி பேசவும் எழுதவும் வேண்டியிருக்கிறது.*

**தீபச்செல்வன்**

இரத்தினபுரம்,
கிளிநொச்சி, வன்னி.
10.05.2011.

# சாம்பலாக்கப்பட்ட நிலத்தின் நடுவிலிருக்கிற சிதைக்கப்பட்ட நகரம்

**01**

*மாடுகள் அலைந்து திரிந்து*
*கண்ணிவெடிகளையும் மண்ணையும் மேய்ந்துகொண்டு*
*சாணியில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாக*
*நகரத்திற்கு வேறு பக்கம் திரும்புகின்றன.*

*எரிந்து கருகிப்போயிருக்கிறது*
*சனங்களின் நிலம்*
*அழிந்து சமதரையாகிப்போன வெளியில்*
*பேய்கள் வாழ்ந்து திரிகின்றன*
*நிலம் எரிந்து சாம்பல் பூத்திருக்க*
*தலைகள் பிடுங்கப்பட்ட*
*மரங்கள் மண்ணில் குத்துண்டு நிற்கின்றன*
*தலையிழந்த பனைகளால் மிகுந்த வெளியில்*
*நோட்டமிடுகிற காவலரண்களைச்*
*சுமந்து நிற்கின்றன வேர்பட்ட பனங்குத்திகள்*
*உப்பு விளைந்த வாடிகளில்*
*இல்லாத சனங்களின்*
*குருதியும் துயரும்*
*சேர்ந்து விளைந்துகொண்டிருக்கின்றன.*

**02**

*யாரும் திரும்ப முடியாத வழியில்*
*எங்கும் குழிகளும்*
*அவற்றில் அவலமும் நிரம்பியிருக்கிறது*
*கல்லறைகளைப் புதைத்து*
*நினைவுச் சிலைகளைக் கொலைசெய்ய*
*இடிந்த கட்டிடத்தின்*
*சுவர்க்கரையில் மாடுகள் கன்றுகளை ஈன்றிருக்கின்றன.*

*ஞாபகங்கள் அழிந்து குவிந்து கிடக்கின்றன*
*விட்டுச் செல்லப்பட்ட முகங்கள்*
*கொளுத்தப்பட்டுக்கொண்டிருக்க*
*கருகிக்கொண்டிருக்கிறது சூரியனின் முகம்.*

*அறுக்காத நெல்மணிகள் சாய்ந்து*
*எரிந்த சாம்பல் வயலில்*

இருப்பிற்காய் அலைந்து
பாதியாய் உடைந்துபோயிருக்கிற
கதிரையை யாரோ விட்டுச் சென்றிருக்கிறார்கள்
புத்தர் கண் விழித்திருக்கிற
அரச மரங்களைத் தவிர எங்கும் நிழலில்லை
வாசல் மறைத்து கறுப்புத் திரையிடப்பட்ட
கோயில்கள் இராணுவ நிறங்களால்
தீட்டப்பட்டிருக்கின்றன
சனங்களின் கடவுள் வெளியேற்றப்பட்ட
ஊரில் அலைகின்றன மிருகங்கள்
மணிகள் அறுத்து கீழே விழுத்தப்பட்டிருக்கின்றன.

மிஞ்சியிருக்கிற ஒரு சில வீடுகளின்
சிதைந்த பகுதியில் சாம்பலில்
தொங்கிக்கொண்டிருக்கிறது
அழிவின் உக்கிரம்
கூரைகளை இழந்த வீடுகளைத்
துளைத்துப் போயிருக்கின்றன
பீரங்கி வண்டிகள்
பேருந்தும் சைக்கிளும்
எரிந்த தகரச் சாம்பலில் புத்தர் அமர்ந்திருக்கிறார்.

கண்கள் பெரிதாய்த் திறந்தலையும்
அரச மரங்களின் கீழ்
பசித்த பாத்திரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன
முற்றிலும் மாறிப்போயிருக்கிறது நிலம்.

**03**

அடையாளம் தெரியாத வீதியில்
பள்ளம் மேடாக்கப்பட்டு
மேடு பள்ளமாக்கப்பட்டு
இடிந்த கற்களின் மேடாயிருக்கிறது நகரம்
சைக்கிள்களையும் கதிரைகளையும்
ஒதுக்கிக் குவிக்கப்பட்டிருக்க
சாம்பல் பரப்பி விடப்பட்டிருக்கிறது
எரிந்த வானத்தின் கீழ்
நகரத்திற்கு மேலாகச்
சாம்பல் உதிர்ந்து கொட்டிக்கொண்டிருக்கிறது.

சிதைந்த மாடியின் மேலிருந்து
தொங்கிக்கொண்டிருக்கிறது
எப்பொழுதும் விழக்கூடிய உடைந்த ஜன்னல்

மின்கம்பங்களில் முட்கம்பிகள் படர்ந்திருக்க
நெடு வீதி கரைந்து ஒழுகுகிறது
விழுந்து கிடக்கிறது நகரின் பிரதான மின்கம்பம்.

வயல்களில் போட்டுச் செல்லப்பட்ட
படகுகளின் கீழாய்க்
குளத்து மீன்கள் அலைகின்றன
வாய்க்கால்களில் சாம்பல் பெருகிப் பாய்கிறது
சாம்பலைச் சுற்றியிருக்கிறது வலை
எல்லாம் தகர்த்து வீழ்த்தப்பட்ட
நகரத்தில்
தோல்வியின் வாசகங்களை
எழுதிக்கொண்டிருக்கின்றன சிங்கள எழுத்துகள்
இராணுவத் தொப்பியால் மூடப்படுகின்றன
பள்ளிக்கூடங்கள்
நெடு வீதி சீருடையால் போர்த்தப்பட்டிருக்கிறது.

**04**

சுவடுகள் அழிக்கப்பட்டு மண்மேடுகளால்
சுற்றி நிரப்பப்பட்ட நகரத்தில்
எதுவும் தெரியவில்லை
சாம்பல் மேட்டில் இனந்தெரியாதபடி
குறுக்கு வீதிகள் அச்சத்துடன் மூடுண்டு கிடக்கின்றன
நகரத்தின் மேல் சாம்பல்
சாம்பலின் மேல் மண்மேடு
மண்மேட்டின்மேல் காவலரண்
முழு நகரத்தையும் தின்றுகொண்டிருக்கிறது
முன்னுக்குச் சென்றுகொண்டிருக்கிற ஆயுத வாகனம்
எப்பொழுதும் இராணுவ மோட்டார் சைக்கிள்கள்
சுற்றிக்கொண்டிருக்கின்றன
அடையாளத்தை இழந்துபோயிருக்கிறது நகரம்.

நிலம் எரிந்து சாம்பலாகிக் குளத்தை நிரப்பியுள்ளது
சொற்கள் மூழ்கி நாறிக்கொண்டிருக்கின்றன
கனவு பாசி பிடித்து எரிந்த தாமரைகளின் வேரில்
சுற்றிக்கிடக்கிறது.

சலனமற்று இருக்கிறது பெருநிலம்
கொலை செய்யப்பட்டிருக்கிறது நகரம்
தோல்வியின் குருதியால் நிரப்பட்டிருக்கிறது குளம்.

**05**

காடுகள் பிரட்டி ஒதுக்கப்பட்ட
தீ எரிந்துகொண்டிருக்கிற திசையில்
அடியுடன் பிடுங்கிக் காய்ந்துபோன முகத்துடன்
எறியப்பட்ட பெருவேரில்
தீர்ந்து போயிருக்கிறது சனங்களின் நம்பிக்கை
முற்றம் இறங்கிய காணியில்
முதிர்ந்த பயன்மரங்களின் வேர்கள்
குவிக்கப்பட்டிருக்கின்றன.

சனங்களை இழந்த வெளியும்
வாசனையை இழந்த நிலமும்
நிறத்தை இழந்த நகரமும்
இனம் எரிந்த சாம்பலில் குளித்தலைகின்றன
பேய்கள் எல்லாவற்றையும் அடியில் தாழ்த்து
அதன்மேல் புதிய மண்ணைக் குவித்து நிரப்பி
எல்லாவற்றையும் அழித்து
அதன்மீது புதிய சொற்கள் எழுதுகின்றன.

வாழ்வு சாம்பலான வெளியில்
நிலம் எரித்து நகரம் சிதைக்கப்பட்ட
பூர்வீகமான வாழ்வு அகழ்ந்து துடைக்கப்படுகிறது.

யாரும் திரும்பாத நெடு வீதியின் கரையாக
இரவு விரிந்து பெருக
மாடுகள் அலையத் தொடங்குகின்றன
குழந்தைகளை இழந்த பொம்மைகள்
வயல்வெளிகளில் கிடந்து உக்கிக்கொண்டிருக்கின்றன.

**02.08.2009**

# அகாலத்தில் உறங்குகிற பெருநிலம்

*எங்கும் கால் வைக்க முடியாதபடி*
*படர்ந்து விதைக்கப்பட்டிருக்கிற கண்ணிவெடிகள்*
*என் குழந்தைகளைப் பார்த்தபடியிருக்கின்றன*
*எனது குழந்தைகள் அஞ்சினாலும்*
*அவர்கள் எதற்கும் அஞ்சவில்லை என்று*
*நானே மறுத்துக்கொண்டு தூங்க வைத்திருக்கிறேன்*
*நிலம் கண்ணிவெடிகளால் நிரம்பியிருக்கிறது.*

*குழந்தைகளிடம் எஞ்சியிருக்கும் கால்களை*
*அவை தின்றுகொண்டிருக்கிற*
*கனவுகளே இராத்திரிகளில்*
*இந்தச் சிறிய இடத்தில் அலைந்து திரிகின்றன*
*மஞ்சள் நிறமாக இழுத்துக்கட்டப்பட்ட*
*அபாயப் பட்டியில்*
*வரிசையாய்த் தொங்கும்*
*எலும்புக்கூடுகளைக் கண்டு*
*இவர்கள் யார் என்று குழந்தைகள் கேட்கிறார்கள்.*

*கால் வைப்பதற்காகத் தரப்பட்ட நிலத்தில்*
*அவர்கள் விளையாடுவதற்கு*
*எந்த மைதானமும் இல்லை*
*அவர்கள் மைதானங்களை மறந்து*
*இடிந்த வீட்டின் மூலையில் இருக்கிறார்கள்.*

*யார் யார் விதைத்தார்களோ*
*எல்லாக் கண்ணிவெடிகளும் ஒரே மாதிரியாய்*
*முளைத்து விளைந்துபோயிருக்கின்றன*
*குழந்தைகளுக்கான நிலத்தில்*
*பூமரங்களை நாட்டவேண்டியிருக்கிறது*
*முற்றம் தரப்படாத காணியில்*
*நாம் மகிழ்ச்சியுடன் இருக்கிறோம் எனவும்*
*எனது குழந்தைகள் கூடாரத்திற்குளிலிருந்து*
*தாயம் விளையாடுகிறார்கள் எனவும்*
*வரும் எல்லோருக்கும் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.*

*குழந்தைகள் உறங்காதிருக்கிறார்கள்*
*அகாலத்தில் பெருநிலம் உறங்கிக்கொண்டிருக்கிறது.*

# உன்னைத் தின்று போட்டிருக்கிறார்கள்

நேற்று உனது புகைப்படம் புதர் ஒன்றிற்குள்ளிலிருந்து
எடுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது.
சகோதரியே! உன்னை உரித்து
சிதைத்தவர்களின் கைகளில்
எங்கள் காலம் நீண்டுகொண்டிருக்கிறது.

கண்டெடுக்கப்படாதவர்களின் சடலங்களுக்கு
என்ன நேர்ந்திருக்குமென்று
தலைகளை இடித்தழும் தாய்மார்களுக்கு
இரத்தத்தால் முடிவுறுத்தப்பட்ட சகோதரிகளுக்கு
உன்னைச் சிதைத்திருக்கிற புகைப்படம்
எண்ணிக்கையற்ற முனைகளில்
நடந்த கதைகளைச் சொல்லிக்கொண்டேயிருக்கிறது.

உன்னைச் சிதைத்து
எங்கு எறிந்திருக்கிறார்கள் என்பதையும்
யார் உன்னைத் தின்றார்கள் என்பதையும்
உனது தொலைக்காட்சியில்
நீயே செய்தியாக வாசித்துக்கொண்டிருக்கிறாய்
நீ நடித்த பாடல்களும் படங்களும்
ஒளிபரப்பப்பட்டுக்கொண்டிருக்கிற அலைவரிசையில்
உனது பாதிப்படம் ஒரு மூலையில்
பார்க்கப் பொறுக்க முடியாத
கோலமாகத் தொங்குகிறது.

அதே படைகளினால் காவலிடப்பட்ட
நிலத்தில் எங்கோ ஒரு மூலையில் உனது
தாயைப்போலவே ஒருத்தி
தன் மகளைத் தேடி துடித்துக்கொண்டிருக்கிறாள்
ஆண்குறிகளை வளர்த்து
இரத்தத்தைப் படையலிட்டிருக்கிற
படைகளின் யுத்த முனைகளில்
உன் சீருடைகளைக்
கழற்றி எறிந்திருக்கிறார்கள்
உன் வீரத்தைக் கரைத்துவிட்டார்கள்
தொலைந்துபோன உன் துப்பாக்கி
படைகளின் கையிலிருக்கிறது.

முன்னர் வெற்றியடைந்த களமொன்றிலேயே
நீ சரணடைந்திருக்கிறாய்
துப்பாக்கிகளும் ஆண்குறிகளும்
ஒரே மாதிரியாய் வாயைப் பிளந்து
உன்னைத் தின்று போட்டிருக்கின்றன.

முற்றத்தில் தெருவில் வயல்களில்
கண்ணிவெடிகளுக்குக் கீழாகவும் மண் பிறழ்ந்த
இடங்களிலெல்லாம்
சீருடைகள் முதலான உடைகளும்
இரத்தமும் சைனைட் குப்பிகளும் புகைப்படங்களும்
மற்றும் சில குறிப்புகளும் கிளம்பி
வந்துகொண்டிருக்கின்றன
என்னிடம் வாங்கிச் சென்ற
கவிதையை எங்கு போட்டிருப்பாய்?

**இசைப்பிரியாவுக்கு**
**25.12.2009**

## முன்பொரு காலத்தில்
## இந்த நிலம் எங்களிடமிருந்தது

*எந்தப் பறவைகளும் வந்தமராத மரத்தின்*
*காய்ந்த கிளைகளில்*
*பழங்கள் காய்த்து கனியும் என்று நம்பியிருந்தோம்*
*அம்மா அந்தப் பறவைகளை எங்கேனும் கண்டாயா?*
*அந்த மரம் நீண்ட காலங்களாய்ப் பட்டுப்போயிருந்தது*
*தலைகளில் ஒடிந்து விழுந்துகொண்டிருக்கிற முற்றத்தில்*
*இப்பொழுது எந்தத் தடிகளும் இல்லை.*
*இந்த வருடம்*
*எங்கள் வீட்டை உடைத்து*
*வாகனங்களில் ஏற்றிக்கொண்டு சென்றதுடன்*
*அச்சம் தரும் நாட்களையே*
*ஒவ்வொன்றாய் விரித்துக்கொண்டிருந்தது*
*வெறும் ஒன்று இரண்டு தடிகளைத் தவிர ஒன்றுமில்லை.*

*பறவைகள் மறந்துபோன எங்கள் கிராமத்தில்*
*சைக்கிள்கள் உடைந்து உக்கிப்போன எங்கள் நகரத்தில்*
*ஒரு புன்னகையைப் பரிமாற*
*கூடியிருந்து ஒரு கோப்பை மதுவை அருந்த*
*யாரம்மா இருக்கிறார்கள்?*
*உன் கைகளில் மாலை நேரத்தைக் கொண்டுவருகிற*
*தேநீர்க்கோப்பைகளைக் காணவில்லை*
*திரும்பாத கிராமத்திற்கும்*
*இறங்காத நகரத்திற்கும் ஊடாகச் செல்லும் பேருந்தில்*
*நாளை நான் பயணிக்கப்போகிறேன்.*

இந்த நாள் கழிந்துபோன வருடத்தின்
இனிப்பாயிருந்த நாட்களையே ஞாபகப்படுத்துகிறது
வெடி அதிரும் இரவு
இன்னும் சற்று நேரத்தில் முடிவடைகிறது
யார் யாரேர வந்து செல்லுகிறார்கள்
எனக்கு முன்னால் ஏதேதோ கிடக்கின்றன
முடிந்துபோன இந்த வருடத்தில்
ஏராளமானவற்றை இழந்துபோயிருக்கிறோம்
என் வீடு தேடுகிற தெருக்களில்
வார்த்தைகளற்று என் சைக்கிள் அலைகிறது
முன்பொரு காலத்தில் இந்த நாள் எங்களிடமிருந்தது.

அந்தப் பறவைகளையும்
அந்தப் பட்ட மரத்தையும்
அதன் கீழிருந்த எங்கள் வீட்டையும்
எங்களிடம் தருவார்களா?
பட்ட மரம் எரிந்து சாம்பலாகிப்போக
பறவைகள் அதில் புதைந்துபோயிருக்கின்றன
வீடுகள் கரைந்துபோன கிராமத்து வெளியில்
எந்த அடையாளங்களுமில்லை
இந்த நாளில் முன்பொரு காலத்தில்
எங்களிடமிருந்த நமது நிலத்தில்
என்னிடம் இருந்த புன்னகையையும் வார்த்தைகளையும்
கோரிக்கொண்டிருக்கிறேன்.

**01.01.2010**

## அப்பத்தின் கதை பற்றிய இரண்டாவது உரையாடல்

எப்பொழுதும் அந்த முதல் உரையாடலை
நீ ஞாபகப்படுத்தியபடியிருப்பாய்
சிகரெட் குறைத்துண்டுகள் ஒதுங்கி குவிந்திருக்கும்
அந்தப் பாதிச்சுவரில்
அமர்ந்துகொண்டு மீளவும் மீளவும்
நாம் பேசியிருக்கிறோம்
ஒவ்வொரு இரவும் கடைசியில் நம்மை
தனித்துப் பேச வைத்திருக்கின்றன
அப்பங்களைத் தூக்கிச் செல்லும்
உனது காலையும்
அதற்கான மாவை இடித்துக்கொண்டிருக்கும்
மாலை நேரத்தையும் நாம் இழந்துபோயிருக்கிறோம்
போரினால் நாம் வாழ்வை இழந்துபோயிருக்கிறோம்.

சிகரெட் புகைக்கும் தேநீர்க்கடையின்
அருகிலிருக்கிற ஓடையில்
வரிசையாய்ப் படிந்துபோயிருக்கிறது சாம்பல்
அசாத்தியமாக வளர்ச்சி பெற்ற நமது நகரத்தில்
பியரை அருந்தியபடி நாம் அலைந்திருக்கிறோம்
சாராயக் கடைகளில்
மதுக்கிண்ணங்களைத் தூக்கி வைத்திருந்தபடி
இருவரும் அப்பங்களை விற்கும் அனுபவங்களைப்
பகிர்ந்திருக்கும்பொழுது
நமது நகரம் வசீகரமான வெளிச்சத்தில்
ஒளிர்ந்தபடியிருந்தது
நமது நகரத்திற்காக நாம் உழைத்திருக்கிறோம்
அதை மிகவும் நேசித்திருக்கிறோம்
கடைகளின் பின்புறமாகக் குந்தியிருந்து
உரையாடிக்கொண்டிருந்தபொழுதும்
விமானங்களுக்கு அஞ்சி பதுங்கியிருந்தபொழுதும்
நீ எனக்குப் பக்கத்திலிருந்தாய்.

நண்பனே சிகரெட்டிற்காய் அடிபடுகிறவர்களாகத்தான்
எப்பொழுதுமே இருந்திருக்கிறோம்
எல்லாவற்றையும்போலவே இப்பொழுது
நீ அப்பங்களைக் கூவி விற்பதற்கான
நமது நகரமும் இல்லை
உனது அப்பங்களும் இல்லை
சிகரெட்டுகளும் இல்லை
மாவை இடித்துக்கொண்டிருக்கிற
மாலை நேரமும் இல்லை
நீ நெருக்கத்தின் பெரிய உரையாடலாய்
முடியாத சிகரெட்டாய்
எனக்குள் புகைந்துகொண்டிருக்கிறாய்
அந்தப் பாதிச்சுவரின் சிதைவில்
சிகரெட் துண்டுகள் என்னவாகியிருக்கின்றன?
போர் எல்லாவற்றையும் அழித்துவிட்டது
உன்னை இழந்திருக்கக் கூடாது
உன்னுடன் நாம் எல்லாவற்றையும் இழந்திருக்கிறோம்.

கைவிடப்பட்ட உனது சடலத்தை
யாரோ கண்டு வந்ததாகச் சொல்லுகிறபோது
உனது அப்பம்பற்றிய
இரண்டாவது உரையாடல்
எனக்குள் தனித்துத் தொடங்கி
முடிவற்று நீளுகிறது
எங்கு தவறிப் போயிருக்கிறாய்?

தகர்ந்துபோயிருக்கிற நகரத்திற்கு
நான் திரும்பப்போவதில்லை
யாரேனும் அங்கு அப்பங்களைக்
கூவிக்கொண்டிருப்பார்களா?
அப்பங்களை வாங்க யார்தான்
காத்துக்கொண்டிருப்பார்கள்?
மூட்டத் தொடங்கும் ஒவ்வொரு சிகரெட்டும்
உனக்காகப் புகைந்துகொண்டிருக்கின்றன
உனக்காக மது நிறைக்கப்பட்ட கிண்ணம்
எப்பொழுதும் எனக்கு முன்னாலிருக்கிறது.

**கஜானந்திற்காக**

**08.09.2009**

# இறுதிநாள் வழியில் தொலைந்தவர்கள்

வழியில் தொலைந்த ஆடுகளின் கதைகளால்
நிறைந்துபோயிருக்கிறது இந்த நாள்
இந்த வானொலி
வழி தவறியவர்களை இன்னும் தேடிக்கொண்டிருக்கிற
இரவு நிகழ்ச்சியை ஒலிபரப்பிக்கொண்டிருக்கிறது
கைகளுக்குள்ளிலிருந்து எப்படி நழுவி விழுந்தீர்கள்
என்று ஒவ்வொரு தாய்மாரும்
இரவு நிகழ்ச்சியில் புலம்பிக்கொண்டிருக்கிறார்கள்
இறுதி நாளிலிருந்து இன்றுவரை
உனதம்மா உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறாள்.

உன் ஞாபகமாய் என்னிடமிருக்கிற ஒரு சேட்டை
முகத்திற்குப் பதிலாகப்
பத்திரிகையில்
எப்படி விளம்பரமாகப் பிரசுரிக்க முடியும்?
புகைப்படங்கள் தொலைந்த வழியில்
வழி தவறியவர்களின்
குருதியுறைந்த உடல்கள் பற்றிய கதைகளை
வேறொரு பத்திரிகையின் மற்றொரு
பக்கம் எழுதிக்கொண்டேயிருக்கிறது
தொலைந்தவர்களைக்
கடிதங்களால் விசாரித்துக்கொண்டேயிருக்கிறது
இன்னொரு பத்திரிகை
தேடிக்கொண்டிருப்பவர்களின்
துயரம் மிகுந்த சொற்கள் நிரம்பிய கடிதங்களை
ஒவ்வொரு வாரமும் கொண்டு வந்துகொண்டிருக்கிறது.

எல்லோரும் திரும்பிவிடுவார்கள் என்ற
நம்பிக்கையை மட்டுமே
இந்தக் கடிதங்கள் வாசிக்கின்றன
தவறி விழுந்த குழந்தையின்
அழுகை எப்படி அடங்கிப்போயிருக்கும்?
கை நழுவி மறைந்த சிறுமியின்
இரவு எப்படியிருக்கும்?

தனித்து தொலைந்த சிறுவனின் வழி எப்படியிருக்கும்?
குழந்தைகளை இழந்த தாயின் வலி எப்படியிருக்கும்?
மனைவியைப் பிரிந்த
கணவனின் திசை எப்படியிருக்கும்?
சகோதரர்களைப் பிரிந்தவர்களது
துயர் எப்படியிருக்கும்?

எல்லோரையும் பிரிந்தவர்களது துயரால் மிகுந்திருக்கிற
கடிதங்கள் அதிகரித்தபடி
பிரிவை அளந்துகொண்டிருக்கின்றன
பதில் வார்த்தைகளற்றுக் கிடக்கிற கேள்விகளால்
இந்த இரவு குலைந்து கிடக்கிறது
காத்திருப்பும் திரும்புவார்கள் என்ற நம்பிக்கையும்
வளர்ந்துகொண்டேயிருக்கின்றன
அவர்கள் தவறிய வழிகள் மூடுண்டபடி
பிரிவை உயர்த்துகிற கடிதங்கள் மிக
ஆழமாகத் தாழ்க்கப்பட்டு
மண் கொட்டிப் பரவியிருக்கிறது
யாரும் திரும்பியதாக இல்லை என்பதை
மிகச் சோகமாகச் சொல்ல முடியாமல்
கரைந்து போகிறது
அந்த வானொலியின் இரவு நிகழ்ச்சி.
மகிழ்ச்சி தரும் சொற்களான
தவறிய யாரேனும் ஒருவர்
எழுதிய கடிதம் ஒன்றுக்காகப்
பல அம்மாக்கள் காத்துக்கொண்டிருக்கிறாள்கள்.

**09.12.2009**

## நிழலற்ற நகரத்தில் கால் பதித்த நாள்

*பூக்கள் உதிர்ந்த எனது நகரத்தில் கால்களை*
*இன்றுதான் இறக்கி வைத்திருக்கிறேன்*
*ஆடித் திரிந்த எனது நகரத்தில்*
*அழிவுகளின் துயரடைந்த காலத்தின் பின்னர்*
*சற்று தூரம்வரை நடந்து திரிகிறேன்*
*நான் விட்டுச்சென்றவைகளைத் தேடுகிறேன்*
*சில சனங்கள் திரும்பியிருக்கிறார்கள்*
*சாம்பலை அள்ளிக் கைகளில்*
*நிரப்பிக்கொண்டு அவர்கள் திரும்பியிருக்கிறார்கள்.*

*அந்த இரவு*
*எனது நகரத்தில் இரண்டாவது முறையாக*
*மீண்டும் கால் பதித்திருந்தேன்*
*முகங்களைத் தேடிக்கொண்டிருந்தேன்*
*முத்தமிட முடியாதபடி*
*குருதியும் சதையும் கலந்துகிடக்கிற மண்ணைக்*
*கொடூரமான ஓவியங்கள் வரையப்பட்ட*
*என் பூர்வீக நகரத்தின் வசீகரம் இழந்த சுவர்களைத்*
*தனியொருவனாய் வாசிக்கிறேன்.*

*சதிகளால் பலியிடப்பட்ட ஆன்மாக்கள்*
*அலைந்துகொண்டிருக்கின்றன என்றும்*
*நகரத்திற்கு மேல் அந்தரத்தில்*
*அவை துடித்துக்கொண்டிருக்கின்றன என்றும்*
*ஒரு மூதாட்டி சொல்லிக்கொண்டு*
*சுவர்க்கரையில் கிடக்கிறாள்*
*நகரம் இருளால் நிரம்பி வெறுமையுள் அமுங்கியிருந்தது*
*பாதி மரங்களும் சிறிய துண்டுக் கட்டிடங்களும்*
*மீண்டும் துளிர்க்கும் என்று*
*அந்த மூதாட்டி*
*இன்னும் சத்தமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறாள்.*

*சாபங்களில் கிழிந்துபோன நகரத்தில்*
*கால் வைக்கிற இடங்களெல்லாம் புதைகிறது*
*முட்கம்பிகளிடமிருந்து*
*மெல்ல மெல்ல எனது நகரத்தைப் பிடுங்கி எடுப்பேன்*
*சிதைவுகளின் கையிலிருந்து*
*மெல்ல மெல்ல எனது நகரத்தைச் செழிக்க வைப்பேன்*
*என் நகரத்தில் மீண்டும் பூக்களை நாட்டுவேன்*
*பூக்களின் நகரத்தில் கனவுகள் பூக்கும்*
*எல்லோரும் வரும் நாட்களில் திரும்புவார்கள்*
*என்ற நம்பிக்கையை நகரத்திலிருந்து வெளியேறிய*
*நள்ளிரவு சொல்லிக்கொண்டு வந்தேன்*
*தனியொருவனாய் வந்திருக்கிற*
*என் காலடியை எண்ணிக்கொண்டிருக்கிறது*
*நிழலற்றுப்போயிருக்கிற நகரம்.*

**02.01.2010**

## அந்தச் சிறுவன் திரும்பி வருவான்

அந்தத் தாய் நம்புவதைப்போல
அவனின் தந்தையும்
சகோதரர்களும் நம்புவதைப்போல
அவன் திரும்புவான் என்பதையே நாமும் நம்புவோம்
அந்த வழிகள் இன்று எங்கிருக்கின்றன?
அவன் பல குழந்தைகளுடன்தான்,
பல சிறுவர்களுடன்தான் காணாமல் போயிருக்கிறான்.

தோழனே! பெருநிலம் முழுக்க முழுக்க
குழந்தைகளின் இரத்தம் படர்ந்த நிலையிலே
தோற்றிருக்கிறது
எதிர்பாராத விதமாக எழுதப்பட்டுக்கொண்டிருக்கும்
அஞ்சலிக் குறிப்புகளில்
அவனுக்கும் ஒன்று எழுத நேர்ந்திருக்கிறது
குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும்
அஞ்சலிக் குறிப்புக்களை
எழுதுவது மிகப்பெரும் சாபமாய் வலிக்கிறது
உனது சொற்கள்
அவனுக்காகக் காத்திருந்ததை நானறிவேன்.

ஏதோ ஒரு தடுப்பு முகாமையும்
ஏதோ ஒரு சிறைச்சாலையும்
மாறிமாறி தேடிக்கொண்டிருந்தாய்
யாரோ பார்த்திருக்கிறார்கள்
அவனின் கிழிந்த காற்சட்டையை

ஷெல் குழந்தைகளைத் தின்னும் என்பதையும்
சிறுவர்களைக் கொன்றுபோடும் என்பதையும்
அந்தச் சிறுவன் அறிந்திருந்தான்
தனக்கு முன்னால் நிகழ்ந்த எல்லா மரணங்களையும்
கண்டு அஞ்சியிருந்தான்.

எங்கள் சிறுவர்கள் இனி புன்னகைப்பார்களா?
அவன் கரைக்கப்பட்ட நிலத்தில்
இனி என்ன நிறத்தில் பூக்கள் மலரும்?
தன் முகத்தையும் புன்னகையையும்
அவன் எங்கு கொண்டுபோய் வைத்திருப்பான்?

தோழனே!
நீங்கள் அவனுக்காகப் புத்தகங்களை எடுத்து வையுங்கள்
அவன் தன் இரவுப்பாடப்பயிற்சிகளை
நிறைவு செய்துகொண்டு
வகுப்பறைக்குத் திரும்புவான்
ஒளித்து வைத்த எல்லாவற்றையும்
அவன் மீட்டுக்கொண்டு
திரும்புவான் என்பதை நாமும் நம்புவோம்.

**சிறுவன் தர்மேகனுக்காய்**

# நிலத்தின் காயம்

யாரும் அறிந்து முடிக்காத மரணங்கள்
நந்திக் கடற்கரையில் கசிந்துகொண்டிருக்கின்றன
எல்லா விதமான சித்திரவதைகளையும்
நீளமாகக் கொலுவிய ஒளிநாடாவைத்
தங்கள் இரவுத் தொலைக்காட்சிகளில்
படைகள் பார்த்து
பொழுதைக் கழித்துக்கொண்டிருக்கிறார்கள்
குற்றவாளிகளால் சிறைபிடிக்கப்பட்ட
பெருநிலத்தில் விரும்பிய எல்லாமே நிகழ்த்தப்படுகிறது.

எல்லாவற்றையும் ஞாபகப்படுத்துகிற
பெரிய துப்பாக்கியை வைத்திருக்கிற
அந்தப் பெரிய இராணுவ வீரனை
ஆட்கள் தங்கள் கனவுகளை இறுகப்பிடித்தபடி
புதைக்கப்பட்ட வெளியிலே நட்டுவைத்திருக்கிறார்கள்
மூர்க்கமும் வெறியும் கொண்ட
அந்த இராணுவ வீரன்
அச்சம் தரும்படியான முகத்தைப்
பெருநிலத்தின் முழுத் திசைகளுக்கும்
காட்டிக்கொண்டிருக்கிறான்.

சனங்களை வென்று வீழ்த்திய
தன் வீரக் கதைகளை அவன்
அளந்துகொண்டிருக்கிறான்
தன் வீரப்பாடலை
வானத்தில் பாய்ச்சி முழுநிலத்தையும் நனைக்கிறான்
குழந்தைகள் செல்ல
மறுக்கப்பட்ட பகுதியில் மரணம் கசிந்து பரவ
எலும்புக்கூடுகளைக் கால்களில் கட்டிய
பேய் மகளிர்
தங்கள் நடனங்களை ஆடுகிறார்கள்.

வீரப்பாடலின் அரசன் கால் வைக்கிற இடமெல்லாம்
மரணமும் குருதியும் நசிபடுகின்றன
குரல்கள் சலசலத்து அடங்க
மண்ணால் மூடப்பட்டிருக்கிறது
வீழ்ந்தவர்களின் கதைகளையும்
வீழ்த்தப்பட்ட முறைகளையும் புகைப்படங்களாக
வெளியிட்டுக்கொண்டிருக்கிறான்
அரசனால் அங்கு நிறுத்தி
வெற்றி வாகை சூடப்பட்டிருக்கிற இராணுவவீரன்
பெருநிலம் காயங்கள் கிழிய
புன்னகைத்துக்கொண்டிருக்கிறது.

## அம்மா திரும்பியிருக்கிற ஆற்றங்கரை காணி நிலம்

புற்களும் பற்றைகளுமாய்க் கிடக்கும் நிலத்தில்
வீடு கரியிருக்கும் உருக்குலைந்த காணியில்
அம்மாவின் களைப்பு தணலூரட்டப்பட்டிருக்கிறது
கடவுள்கள் எங்களைக் கைவிட்டதாய்
ஒரு நாள் உணர்ந்தபொழுது காணி நிலம் தரும்
பராசக்தியிடம் அம்மா உணவிழந்து பசியிருந்தாள்
ஆற்றங்கரையில் கிடக்கும் இந்தக் காணி நிலத்தைப்
பராசக்தி ஏன் கைவிட்டாள்?
யுத்தக் குற்றங்களுக்காக
நிறைவேற்றப்பட்ட தண்டனைக் காலத்தின்
எந்தச் சித்திரவதைகளையும்
பகிரப்போவதில்லை என்று
அம்மா ஒப்புதலளித்திருக்கிறாள்.

வீடு திரும்பியிருக்கிறோம் என்பதை
இந்த ஆற்றங்கரைப் பறவைகள் கொண்டாடுகின்றன
ஒரு நாள் ஆறு பெருக்கெடுக்கையில்
என்னைக் கைகளில் அம்மா நிரப்பி வைத்திருந்தாள்
என்னை இழுத்துச் சென்றுவிட்டு
வேர்களால் கரமளித்து
கரையேற வைத்தது மருதமரம்
மூடியிருக்கும் ஆற்றங்கரையில் சிதைவடைந்த
கரைகளைக் காண முடியவில்லை
கனவுக்காகச் சிந்திய அம்மாவின் உதிரம்
ஆற்றங்கரையில் காயாமல் படிந்திருக்கிறது.

கிளைகளை இழந்த நாவல் மரத்தில்
தங்கை ஊஞ்சல் கட்டி
எப்படி ஆடப்போகிறாள்?
பட்டுப்போகாத அதன் வேர்களைத் தடவும்
அம்மாவின் புன்னகையில்
ஆதி நிழலைப் பெய்கிறது
நாவல் மரத்தின் கீழாய்
நாவற்பழங்களைப் பொறுக்கும்
குழந்தைகளைக் காணவில்லை
சுவர்களைத் தேடும் அம்மா
உக்கிய கடவுகளின் புகைப்படங்களை எடுக்கிறாள்
அண்ணாவின் புகைப்படம் அழிந்துபோயிருந்தது.

இன்னும் உயிருடன் இருக்கின்றன மருதாணிமரம்
மற்றும் சில பூவரசமரங்கள்
பாதி நிழலை வைத்திருக்கிறது மருதமரம்
சாம்பல் சுவடுகளின் மேலாய்
புதிய கூடாரம் நாட்டப்பட்டிருக்கிறது
வானத்தின் காயம் ஆறிவிடும் என்று
அம்மா நம்புவதைப்போல
மீண்டும் வீடு வளரும் என்று தங்கை நம்புகிறாள்
காணி நிலத்தில் மீண்டும் பாடல்கள் முளைக்கின்றன.

கனவுகளின் பாத்திகளும் வரம்புகளும்
உருக்குலைந்துபோக
எறியப்பட்ட பனை விதைகள்
வடலியாய் வெடித்திருக்கின்றன
எங்கள் புன்னகை ஆற்றங்கரையை விட்டு
பெயர்ந்துபோன எல்லாப் பறவைகளையும்
அழைத்துக்கொண்டிருக்கிறது.

**09.05.2010.**

# கொலைக் காட்சிகளின் நிழல்

**01**

கொலைக் காட்சிகளின் நிழலில் உயிரிழந்த
சிறுவனின் சித்திரவதையினால் எழும் குரல்
கேட்டுக்கொண்டேயிருக்கிறது.

முதலில் எல்லோரையும் கைது செய்தனர்
சிலரது கண்களைக் கட்டினர்
சிலரது கைகளைக் கட்டினர்
இறுதியில் எல்லோருக்கும்
கைகளும் கண்களும் கட்டப்பட்டன
வரிசையாக இருத்தப்பட்டனர்
புற்களின் மேலாயும் பற்றைகளின் வழியாகவும்
வதை எழும்பும் ஒலியுடன் இழுத்துச்செல்லப்பட்டனர்.

மாபெரும் கொலைக் காட்சிகள்
நிகழ்த்தப்பட்ட நிலத்தில்
குருதியின் மேலாய்ப் பூக்களைத் தூவ
தந்தையை இனங்கண்ட சிறுமி காத்திருக்கிறாள்
மறுபடியும் அதே நாட்களில்
வானம் உறைந்து கிடக்கிறது
உருகிக் கொட்டுகிறது
சத்தமிட்டு அழுதுகொண்டிருக்கிறது
கைகள் பின்பக்கமாகக் கட்டப்பட்டுள்ளன
துப்பாக்கிகள் விசாரணை செய்கின்றன
பிரிபடாத நிலம் இருண்டுபோய்க் கிடக்கிறது.

சடலங்களால் நிரம்பிய நிலத்தில்
கனவு முறியடிக்கப்பட்ட இரத்தத்தில்
அநியாயம் வென்று களிக்கும் வெறியில்
இனம் துடிக்கும்
பெருங்கொலைகளின் தொடர்ச்சி நிகழ்ந்தன
அந்த இரத்தம் வெளியில் தெரிய வேண்டி வந்தது

அந்த கூக்குரல்கள் வெளியில் கேட்க வேண்டி வந்தன
அந்தக் காட்சிகள் வெளித்தெரிய வேண்டி வந்தன
சித்திரவதைகளினால்
இந்தப் பெருநிலம் அதிர்ந்துகொண்டிருந்தது.

இரத்தம் வடிந்து நனைந்துபோன
நிலத்தில் இருத்தப்பட்டனர்
மண் சித்திரவதை செய்யப்பட்ட
நிலத்தில் இருத்தப்பட்டனர்
மழை வெருண்டபடி மேலும் அழுகின்றது.

02

படைகளது உடைகள் இன்னும் பச்சை நிறமாகின்றன
அவர்கள் ஒரு நாட்டின் ஒரு தேசத்தின்
மனிதாபிமானத்திற்கான படைகளாகக்
கௌரவிக்கப்படுகின்றனர்
துப்பாக்கிகளின் பிரியர்களாகத்
துருப்பிடித்த துப்பாக்கிகளை
மீட்டு வைத்திருக்கின்றனர்
அவர்களது இராணுவப் புன்னகையிலிருந்து
வெளிப்படுகிறது பேய்களின்
நடனத்தின் அதிர்வு.

அரசனின் பிரியத்தை அவர்கள் நிறைவேற்றுபவர்கள்
தளபதிகளின் உத்தரவை நடத்துபவர்கள்
இறுதியில் அரசனுக்கும் தளபதிகளுக்கும்
படைகள் இரத்தத்துடன் கூடிய
சதைகளைப் படைக்கின்றனர்
தளபதி இன்னுமின்னும் வீங்குகிறான்
அரசன் இன்னும் இன்னும் வீங்குகிறான்
அரசனின் புன்னகை வீங்குகிறது
தளபதிகளின் நட்சத்திரங்கள் வீங்குகின்றன
படைகள் இன்னுமின்னும்
வெறியூட்டி வளர்க்கப்படுகின்றனர்.

அவர்கள் யுத்தத்தின் தந்திரங்களை
வெற்றியின் குரூரங்களைப் பகிர மிக விரும்புகின்றனர்
இனஅழிப்பை அதற்கான படுகொலையை
மீளமீள விளக்கத் தயாராக இருக்கின்றனர்
வீரம் நிறைந்த அர்த்தத்தில்
சடலங்களின் முன்பாகக் கம்பீரமாக நிற்கவும்
சடலங்களை அள்ளிப்
பெருங்கிடங்குகளில் நிறைக்கவும் விரும்புகின்றனர்.

03

வெள்ளைக் கொடிகள் கொலை பதுங்கியிருந்த
ஒற்றர்களாக மாறியிருந்தன
எதிர்வரும் எவரையும் ஏதோ ஒரு அடிப்படையில்
சுட்டுத் தள்ளுவதற்கு
அவர்கள் தயாராகவும்
ஆர்வமாகவும் செயல்பட்டனர்
சரணடைந்தவர்கள் கொலைக்குப் பரிசளிக்கப்பட்டனர்
கைது செய்யப்பட்டவர்கள்
சித்திரவதைகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டார்கள்
கொன்ற பின்னர் குழந்தைகளை
வெள்ளைக் கொடிகளால் போர்த்தியிருந்தனர்
புணர்ந்து முடித்த பின்னர் பெண்களையும்
வெள்ளைக் கொடிகளால் மூடியிருந்தனர்.

மேல்சட்டைகளையும் கீழ்சட்டைகளையும்
கைகளில் விலங்காக்கியிருந்தனர்
கொலையின் தந்திரம் மிகுந்த கயிறுகளால்
கைகளைப் பிணைத்திருந்தனர்
ஒவ்வொருவரும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே
தங்கள் குருதி
வெளியேறிக்கொண்டிருந்ததைக் கண்டனர்
அவர்களது குருதி பிரட்டப்பட்ட
மண்ணில் ஆழத்திற்குச்
செல்லுவதைப் பார்த்துக்கொண்டிருந்தனர்
அவர்களுக்குப் பலவிதமான
சடலங்கள் காண்பிக்கப்பட்டன.

கொல்லவும் சித்திரவதை செய்யவும்
வேருடன் அழிக்கவும் பயிற்சி கொடுக்கப்பட்ட படைகள்
இறுதியில் சடலங்களின் முன்பாக நின்று
வெற்றியைப் பகிர்வதுடன்
தங்கள் கடமையை முடிப்பதில்லை
அழிவுக்கான புதிய கட்டளைகளை நிறைவேற்ற
அவர்கள் எப்பொழுதும் காத்திருக்கின்றனர்
குருதியின் கனவுகளை அவர்கள்
வளர்த்துக்கொண்டிருக்கவே விரும்புகின்றனர்.

நிலத்தைக் கைப்பற்றவே
படைகள் நடவடிக்கை செய்தன
மக்களைக் கொல்லவே படைகள் இறந்தனர்
அதனால் படைகள் மக்களைக் கொன்றனர்
அதனால் படைகள் போராளிகளைக் கொன்றனர்

*அதனால் அரசன் நிலத்தைக் கொன்றான்*
*குருதியாலும் சதையாலும்*
*அரசன் தன் மாளிகையைக் கட்டி வைத்திருக்கிறான்.*

**04**

*கொலையின் பயம் உறைந்த கண்களை*
*என்ன செய்தீர்கள்?*
*எல்லா முகங்களையும்*
*பார்த்துத் தவித்துக்கொண்டிருக்கும்*
*ஏக்கம் உறைந்த முகங்களை என்ன செய்தீர்கள்?*
*தனித்து மாட்டுண்ட சிறுவனை என்ன செய்தீர்கள்?*
*கைதவறி விட்டுச் சென்ற*
*குழந்தையை என்ன செய்தீர்கள்?*

*ஏன் சப்பாத்துகள் நெருங்கின?*
*ஏன் பயங்கரமான சீருடைகள் நெருங்கின?*
*ஏன் ஆழமாய் அழித்துக்கொண்டிருக்கும்*
*துப்பாக்கிகள் நெருங்கின?*
*ஏன் அழித்து முடிக்கச் சொல்லிய*
*கட்டளைகள் நெருங்கின?*

*சித்திரவதைகளால் உயிரை இழந்துகொண்டிருந்த*
*சிறுவனின் முகம் கொலைக்காட்சிகளில்*
*இன்னும் நெளிந்துகொண்டிருக்கிறது*
*நிலத்திற்கிடையில் குழந்தைகள் அலைகின்றனர்.*

**19.05.2010**

தமிழர்கள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்படும் அதிர்ச்சியூட்டும் மேலும் சில புகைப்படங்களுடன் அவர்கள் எப்படிச் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள் என்ற விடயங்கள் உட்பட இறுதிக் களத்தில் இராணுவம் எப்படிச் செயல்பட்டது என்பதை விளக்கும் இராணுவ அதிகாரி ஒருவரது நேர்காணலுடன்கூடிய போர்க்குற்றம் பற்றிய விபரணப்படத்தைச் 'சனல் 4' தொலைக்காட்சியில் ஜெனாதன் மில்லர் வெளியிட்டிருந்தார்.

## ஆதிக்கத்தின் அபாயம் படிந்திருக்கிறது

அடர்த்தியாய் வளர்ந்துபோயிருக்கிற
பற்றைகளுக்குள் ஆதிக்கத்தின் அபாயம் படிந்திருக்கிறது
குழந்தைகள் தூரத்திற்குச் சென்று
விளையாட வேண்டாம் என்று அறிவுறுத்தும்
தாய்மார்கள் வேலிகளை அடைக்கவும்
கூடாரங்களுக்குக் கதவுகளைப் பூட்டவும் முயல்கின்றனர்.

விட்டுச் சென்ற பொருட்கள்
எங்கும் சிதைந்து கிடக்கின்றன
மெலிந்து ஒடிந்து
வந்துசேரும்பொழுது முதலில் நிலத்தில்
விழுந்து ஆற அழ வேண்டும்போலிருக்கிறது
கைவிடப்பட்ட சனங்களின் நிலமெங்கும்
ஆதிக்கமும் ஆக்கிரமிப்புமே
நடப்படுகின்றன
முன்பொரு காலத்தில் அழகாயிருந்த நமது நகரம்
புதிய வடிவத்தில்
சூறையாடப்படும் புத்திகளால் வார்க்கப்படுகிறது
குழந்தைகள் பற்றைகளுக்குள் படிந்திருக்கும்
அபாயங்களைக் கிளற முற்படுகின்றனர்.

இது எனது நகரம் இல்லைபோலிருக்கிறது
இங்கு வந்திருப்பவர்கள்
எனது மனிதர்கள் இல்லைபோலிருக்கிறது.

காலம் எங்களை இழுத்தடித்து ஏமாற்றியிருக்கிறது
ஒன்றுமில்லாத நிலத்தில்
சூறையாடப்பட்ட நமது பொருட்களை இழந்து
நிவாரணத் தகரங்களில் வெந்துகொண்டிருக்கிறது
மீளத் தொடங்குகிற வாழ்வு
முகாங்களில் கட்டி வைத்திருந்த மூட்டைகளுடன்
இன்னும் இன்னும் சனங்கள் வந்திறங்குகின்றனர்
பதிவுகளும் புகைப்படங்களும்
பேருந்துகளும் என்று
எல்லாவற்றிலும் அலைச்சலும்
துயரமும் பரிசாக வழங்கப்படுகிறது
கடும் சித்திரவதைகளுக்குப் பின்னால்
அவர்கள் தங்களைத்
தகரங்களால் மூடிக்கொள்கிறார்கள்.

கண்ணிவெடிகளைப் பணியாளர்கள்
பிடுங்கிக்கொண்டிருக்கும்
பகுதியைத் தாண்டி மாடுகள் செல்கின்றன
சிதைந்த சைக்கிள்களின் பாகங்கள் முதல்
எல்லாவற்றையும் தேடிக்கொண்டிருக்கிறோம்
வாழ்வுக்காக மிகத் தவிக்கிறோம்
விட்டுச்சென்ற சமையல் பாத்திரங்கள் முதல்
புகைப்படங்கள் வரை
எல்லாவற்றையும் தேடிக்கொண்டிருக்கிறோம்
இந்த நிலத்திற்குப் பொருத்தமற்ற
வேறுபட்ட பொருட்களைக் கொண்டு வருகிறார்கள்
அழிக்கப்பட்ட பெருநிலமெங்கும்
சிதைவுகளிலிருந்து செடிகள் முளைக்கின்றன
அழிவு உறைந்துபோயிருக்கிற
அபாயச் சூழலில்
இந்தக் குழந்தைகள் புன்னகைக்கத் தொடங்குகிறார்கள்.

**13.10.2010**

# படரும் துயர் நிழல்

நிலம் பறித்த துயரினால் எழும் சனங்களின் குரல்
எனக்குக் கேட்கும்பொழுதுதான்
என் புகைப்படங்களை
மிருகங்கள் பறித்துக்கொண்டிருந்தன
மிருகங்களின் முகாம்களுக்கும்
அவைகளின் துப்பாக்கிகளுக்கும்
ஊடாகத்தான் அந்த ஆறு செல்கிறதாய்
சொல்லுகின்றன மிருகங்கள்.

தெருக்கரையில் குந்தியிருக்க அனுமதிக்காய்க்
காத்திருக்கும் கணவனை இழந்த
ஒரு பெண்ணைத் தவிர
யாருடைய முகத்தையும் பார்க்க முடியவில்லை
என்னைத் தடுத்து வைத்திருக்கும்பொழுது
அவள் வழியற்று வந்திருக்கிறாள்
பிள்ளைகள் பாரமாகிவிட
அதற்காக மிருகங்களிடம் செல்கிறாள்.

புகைப்படங்களில் உனது நிழலிருக்கிறது
உனது நிழலை ஏன் முகாங்களின்மீது விழுத்தினாய்
என்கின்றன மிருகங்கள்
நான் பார்க்க முடியாத துயர்பெருகிய முகங்களை
இந்தக் கமரா பார்த்திருக்கிறது
இந்தக் கமராவின் முன்னால்
எனது நிழல் விழுத்திக்கொண்டிருக்கிறது.

இவர்கள் என் சனங்கள்
இது என் நகரம்
இது நான் நீந்திய ஆறு
இது எனது நிலம்
எதற்கும் சான்றுகள் மறுக்கப்பட
நாடற்றவனைப்போல் கைதாகியிருந்தேன்.

அன்றைய நாள் இந்த நகரம் எங்களிடமிருந்தது
எங்கள் சனங்கள் இந்த நகரத்தில் மகிழ்ந்திருந்தனர்
எந்த முகாம்களும் மூடாது
ஆறு பாய்ந்துகொண்டிருந்தது.

நிலத்திற்காகச் சனங்கள் அழுதுகொண்டேயிருந்தனர்
குழந்தைகளின் பாரம் அதிகரிக்க
அந்தப் பெண்ணிற்குத் தெரு மறுக்கப்பட்டதுபோல
எனக்கு ஆறு மறுக்கப்பட்டது
மூன்று மணித்தியாலங்களின் பின்னர்
தீர்ப்பு அறிவித்தனர்.

எல்லாப் புகைப்படங்களும் பறிக்கப்பட்டு
எல்லா அடையாளங்களும் பெறப்பட்டு
நான் வெளியில் அனுமதிக்கும்பொழுது
புகைப்படத்தில் உள்ள உன் நிழலையும் தரமாட்டோம்
என்றன மிருகங்கள்
என்னை நாடற்றவன் என்று
மிருகங்கள் தீர்ப்பளித்தபொழுது
ஏன் அந்த நிழல் வரைபடமெடுத்து
நிலமெங்கும் படர்ந்துகொண்டிருந்தது?

**ஜூலை 31, 2010**

# போரின் குழந்தைகள்

ஒரு தடியையோ சில கட்டைத் துண்டுகளையோ
இந்தக் குழந்தைகள் எடுத்துச் செல்கின்றனர்
சிறிய குழிகளையோ சிறிய பற்றைகளையோ
அவர்கள் தேடிச்செல்கிறார்கள்
மிக நீளமான தூரத்திற்கு
அவர்கள் எறியும் கற்கள் சென்று விழுகின்றன
இரத்தம் வடிந்துகொண்டிருப்பதற்கு குங்குமத்தை
அல்லது கடதாசிப் பூக்களைக்
கரைத்து அப்பிக்கொண்டு
பழைய சீலைத்துணிகளைக் கட்டிக் கிடக்கிறார்கள்.

வயற்கரைத் தென்னைமரங்களில்
மீண்டும் இளநீர்கள் காய்த்திருக்கின்றன
பெயர்த்துத் துரத்தப்பட்ட சனங்கள் குடியிருந்த
தொகுதிக்கு யாரும் திரும்பவில்லை.
லூர்த்தம்மாவும் அபிராஜும்
சைக்கிளை எடுத்துக்கொண்டு
எல்லாத் தெருக்களுக்கும் செல்கின்றனர்
கோணாவில் குளத்தில் தாமரைகள் பூத்திருக்கின்றன.

லூர்த்தம்மாவின் கண்கள் சிவக்கின்றன
அபிராஜின் கைகள் காய்த்துப் போயிருக்கின்றன.

ஒளிந்து விளையாட அவர்கள் நினைக்கும்பொழுது
பதுங்குகுழிகள் மிக அருகில் இருக்கின்றன
கூடாரங்களோ குழந்தைகளின் வார்த்தைகளைத்
தாங்கமுடியாது அசைகின்றன
கூடாரங்களைச் சில வேளை
குழந்தைகள் கழற்றிவிடுகின்றனர்.

மீண்டும் வயல்களுக்குள் இறங்குபவர்களையும்
லூர்த்தம்மா பார்த்துச் செல்கிறாள்.
சின்னக்கோயிலில் தீபம் வைக்கும் அபிராஜின்
கண்களில் பனித்த இரவுகளின்
சித்திரவதைகள் எரிந்துகொண்டிருந்தன

லூர்த்தம்மாவின் கைகளில் கொடுக்கப்பட்ட
துப்பாக்கிகளைப் பறித்துவிட்டனர்
அபிராஜிடமிருந்த குண்டுகளைப் பறித்துவிட்டனர்.

தோட்டாக்களை எண்ணிக் கணக்குப் பார்க்கவும்
குண்டுகளை அடையாளம் காட்டவும்
வெற்று செல்பெட்டிகளில் புத்தகங்களை அடுக்கவும்
மிதிவெடிகளைத் தூக்கிச்சென்று
பின்வளவுகளில் போடவும்
இந்தக் குழந்தைகள் பழகியிருக்கின்றனர்
சிங்களப் பெயர்ப்பலகைகளால் எச்சரித்திருக்கும்
சில வீதிகளுக்குச் செல்லாதிருக்கவும்
உயரமான வேலிகளால் மூடப்பட்ட வீடுகளுக்குத்
தூரமாகச் செல்லவும்
அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர்
அரிக்கன் லாம்புகளைக் குழந்தைகள் தூண்டிவிட்டு
குப்பி விளக்குகளைக்
கைகளில் தூக்கிச் செல்லுகிறார்கள்.

லூர்த்தம்மா இழுத்துச் செல்லப்பட்ட தெருக்களில்
இப்பொழுது மிதிவெடிகள் பதுங்கியிருக்கின்றன
அபிராஜ் ஒளிந்திருந்த காணிகளுக்குள்
பிரவேசிக்க முடியாதபடி
அபாய வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளன
லூர்த்தம்மாவையும் அபிராஜுவையும்
இழுத்துச் சென்றவர்கள் மீண்டும் தெருக்களில் திரிய
கையசைத்து
வரிசையாய்ச் சென்றவர்களது
உடல் நிலம் அழிக்கப்பட்டிருக்கின்றன.

சனங்களின் குருதியால் சிவந்தநிலத்தில்
குழந்தைகளுக்காக
எஞ்சிய வெடி பொருட்களின் பாகங்களைத் தவிர
ஒன்றுமில்லை
எல்லாவற்றின் முன்பாகவும்
குழந்தைகள் செல்லுகின்றனர்.

# எருக்கலைப் பூநிலம்

இந்த நிலத்தில் அழைக்கப்படும்
குரல்களை நீ கேட்கிறாயா?
அம்மா என்றும் தாய்நிலமே என்றும்
இடிந்து மூடுண்டிருக்கும்
கற்குவியல்களுக்கு இடையிலிருந்து எழும்
அடங்காத வார்த்தைகள் உனக்குக் கேட்கிறதா?
மாபெரும் சனங்களின்
கண்ணீர் நிறைக்கப்பட்ட கிடங்கில் இரத்தம் கசிகிறது.

எலும்புத்துண்டுகள் மேலெழுந்து உடைந்துபோயிருப்பது
உனக்குத் தெரிகிறதா?
சிதைக்கப்பட்ட எலும்புத் துண்டுகளையும்
கல்லறைத் துண்டுகளையும்
எங்களிடம் தந்துவிடு
அதில் எருக்கலைக் கன்றுகள் பெருகுகின்றன
கைகளில் எந்த மரக்கன்றுகளும் இல்லை
தென்னை மரங்களோ
கன்றுகளைத் தரும் நிலையிலில்லை
கன்றுகள் இறந்து கருகிக்கிடக்கும் நிலத்தில்
காயங்களுடன் நிற்கின்றன பெருமரங்கள்.

எருக்கலைப் பூக்களைச் சூடியபடி எனது காதலி
குழிகளில் இருந்து எழும்பி வருகிறாள்
சகோதரனோ எருக்கலை செடியின் வேர்களில்
முகத்தைப் பரவியிருக்கிறான்
மண்ணுக்கடியில் அவர்கள் இருக்கிறார்கள் என்று
பிதற்றுகின்றன குழந்தையாகிய தாயின் வார்த்தைகள்.

நீ கேட்டாயா மண்ணுக்கடியில் திரிபவர்கள்
என்ன பேசினார்கள் என்று?
நீ பார்த்தாயா
என்ன பொருட்களை வைத்திருக்கிறார்கள் என்று?
சிதைக்கப்பட்ட எல்லாத் துகள்களிலும்
ஏன் எருக்கலைகள் பூத்திருக்கின்றன?
உயிரோடிருந்தவர்களைக் கொன்றவர்களே!
துப்பாக்கிகளையும் சன்னங்களையும் நட்டு
எங்கள் நிலத்தைக் கொலை செய்திருக்கிறீர்கள்
இந்தப் பெருநிலம்
மரணத்துடன் கனவு படிந்த
எருக்கலைப் பூ நிலமாகிறது.

## மலைச் சிறுவர்கள்

*சிறுவர்கள் மொய்த்திருந்த மலைகளில்*
*அந்த இலைகள் பச்சை நிறமாக*
*மரங்களோடிருந்திருக்கும்*
*அந்தக் குடில்களில் கனவுகள் நிரப்பப்பட்டிருக்கும்*
*கனவுநிலத்தில்*
*அந்தச் சிறுவர்களின் குருதி பிரண்டிருக்கிறது*
*தோழி நீ எண்ணுவதைப்போல*
*சந்து ஒரு நாள் துப்பாக்கிகளால் கொல்லப்படலாம்*
*இந்தக் காடுகளுக்காகவும்*
*காடுகளில் வேரோடியிருக்கும் பழங்குடிகளுக்காகவும்*
*அவன் ஒரு துப்பாக்கி வைத்திருக்கிறான்.*

*கனவுகளோடு அலையும் அந்தப் போராளிகள்*
*கேட்கும் பச்சைச் செழுமையைத்*
*தின்பதற்காய் முதலைகள் பருத்துத் திரிகின்றன*
*புழுதி மூடிப் புகையால்*
*நனைந்து சிவப்பாக்கிய சிறுவர்கள்*
*மலைகளின்மீது ஏறி*
*துப்பாக்கிகளைக் கொண்டுசெல்லுகின்றனர்*
*மாபெரும் புண்ணாகிக் கிடக்கிறது*
*ஆதிக் குடிகளின் நிலம்.*

*மலைப் பாறைகளின் படுக்கைகளுக்கும்*
*இலைகளின் குளிர்ந்த நிழலுக்கும்*
*அகழ்ந்து அழிக்கப்படாத நிலத்தின் வாசனைக்கும்*
*இவர்கள் போராடுகின்றனர்*
*இந்தக் காடுகள் அமைதியான இரவில்*
*அல்லது வெயில் கொதிக்கும் பகலில்*
*துப்பாக்கி ஏந்திய*
*சிறுவர்களின் இரத்தத்தினால் நனைகின்றன*
*இரத்தம் பிறண்டு காடுகளுக்குள்*
*சிறுவர்கள் மேலும் நுழைந்தபொழுதும்*
*திரவியங்களுடன் பெருந்தலைகள் திரும்புகின்றன.*

**மாவோயிஸ்ட் போராளிகளுக்காக**

## போர்நிலம்

வெறும் நிலத்திற்குப் பொம்மைகள் திரும்புகின்றன
பிரயாணிப்பவர்கள் எல்லோரது கைகளிலும்
பெருத்த வண்டிகளிலும்
அவர்களிடமுள்ள அகலமான குறுக்குப் பைகளிலும்
நிலத்தை அள்ளிச் செல்லுவதாக
வயது முதிர்ந்தவர்கள் பிதற்றுகிறார்கள்.

போர்நிலத்தில் குழந்தையின் பொம்மை
இறந்து சிதைவுகளுடன் கிடக்கிறது
கொல்லப்பட்டிருக்கிற தாயைக் குறித்தோ
தன் தந்தையைக் குறித்தோ
எதுவும் கேட்காமல் மறந்துபோன குழந்தை
தன் பொம்மையைத் தேடிப் பாதியாய் மீட்டிருக்கிறது.

தறப்பால் துண்டுகளுடன்
சில பூவரசம் தடிகளையும் எடுத்துக்கொண்டு
பொம்மை வீடுகளை
குழந்தைகள் மூட்டிக்கொண்டு அதனுள் இருக்கின்றனர்
சுவர்களோ தடுப்புகளோ இல்லாத
பொம்மை வீட்டுக்குள்
காற்றும் புழுதியும் வெம்மையும்
நுழைந்து காலச் சித்திரமாய்ப் படிந்திருக்கின்றன.

பெருமழையின் ஈரம் ஊறி முட்டிய
நிலத்தில் கைகளால் மண் அணைத்தபடி
சேற்றில் குளிக்கும்
குழந்தைகளின் கைகளிலிருக்கிற பொம்மைகளின்
வீடுகளுக்காகப் போர் தொடங்குகிறது.

யுத்தம் பிடித்து அழிவுகள் நிறைந்துபோய்க் கிடக்கிற
நிலத்தின் வாசனையைக் குழந்தைகள் முகர்கின்றனர்
வெடிப்பொருட்களின் புகை
இருதயத்தை ஊடறுத்துச் செல்கிறது
நஞ்சூறி நீலமாகிய தண்ணீரைக் குடித்து
குழந்தைகள் பசியாறுகின்றனர்.

தங்களைத் தாங்களே கொலை செய்யும்
குழந்தைகளின் கையில்
உடைந்த பொம்மைகளைத் தவிர ஒன்றுமில்லை
போர் தின்று
நஞ்சுண்ட நிலத்தில் குந்தி இருப்பதற்காய்
இன்னும் போர் நடக்கிறது.

## யாருடைய எலும்புக்கூடுகள்?

மலக்குழிகளிலிருந்து தீர்க்கப்பட்ட எலும்புக்கூடுகள்
மூடிகளின் மேலாய் வெளித்தள்ளுவதை
குழந்தைகளே பார்த்தனர்
உயிர் பிரிந்தலையும் யாருடைய எலும்புக்கூடுகள்?
சடலங்களுடன் கட்டி அடக்கப்பட்ட
பலகைத்துண்டுகளிலும் படிக்க முடியாத
குறிப்புகள் வெளித்தள்ளுகின்றன
சடலங்களுடன் மீட்கப்பட்ட
பனைமட்டைகளில்
ஒலிபிரிந்த வார்த்தைகள் ஒட்டியிருக்கின்றன
அடக்கி மலக்குழிகளில் தள்ளப்பட்ட
பொலித்தீன் பைகளின்
மூலைகளில் அடங்கியிருக்கும்
உயிரைத் தேடும் தாய்மார்கள் வந்திருக்கின்றனர்.

கழுத்திலிருந்த சயனைட் குப்பிகளில்
இறுதி வார்த்தைகளை
நிரப்பிவிட்டுப் போயிருக்கிறார்கள்
கையில் கறுப்புக் கயிறுகளில் கட்டிய
இலக்கத்தகடுகளின்
முடிச்சுகளினிடையில் துயரக் காலம் படிந்திருக்கிறது
வரிச்சீருடை அணிந்திருக்கும்
இரண்டு எலும்புக்கூடுகளில்
அழிக்கப்பட்ட தாய்நிலத்தின்
வரைபடம் கீறப்பட்டிருக்கிறது
கிணற்று வாளியில் தன் பிள்ளையின்
கண்களைத் தாய் எடுத்து வைத்திருக்கிறாள்
ஏன் சடலங்கள் மலக்குழிக்குள் ஒளிக்கப்பட்டன?

உக்கிப்போகாத சதைத் துண்டுகள்
பெருங்கனவின் எச்சங்களாய் உருந்து கொட்டுகின்றன
கால்சட்டை அணிந்த எலும்புக்கூட்டில்
பெண் ஒருத்தி தன் கணவனின்
மடியாத புன்னகையைத் தேடுகிறாள்
புடவை சுற்றப்பட்டிருக்கும் எலும்புக்கூட்டில்
ஆழமாக விழுந்திருக்கும் கீறல்களை
எல்லோரும் எண்ணுகிறார்கள்
நிர்வாணமாயிருக்கும் எலும்புக்கூட்டில்
குழந்தைகள் தந்தை தாய்களை உணருகின்றனர்
அடையாளங்களாக பொலித்தீனில்
உக்காது படிந்திருக்கும்
காயங்களையும் வீக்கங்களையும்
ஆற்றத் துடிக்கின்றனர் தாங்காதிருக்கிற தாய்மார்கள்
மலக்குழியில் சடலங்கள் நிறைந்து மகிழ்பவர்கள் யார்?

ஆக்கிரமிப்பாளர்களால் மூடப்பட்ட கிணற்றுக்குள்
உயிர் வதைப்பட்ட
மணம் கிளம்புகிறதைப் பார்க்கிறேன்
அவர்கள் இறங்கி கைகளைக் கழுவி
மூழ்கிக்கிடந்த கிணற்றுக்குள்
தண்ணீரில் இரத்தக்கறைகள் மிதக்கிறதாய்
தாய் சொல்லுகிறாள்
இடிபாடடைந்த சுவர்க்கரைகளில்
சித்திரவதையின் கோடுகள் நிறைந்த
எலும்புக்கூடுகளின் தலைகள்
இறுக்கமாக மூடுண்டு கிடப்பதையும்
குழந்தைகள்தான் பார்த்தனர்
ஏன் எலும்புக்கூடுகள் வெளியில் வருகின்றன?
எலும்புக்கூடாகும் நகரத்தில்
குழந்தைகளின் கண்களைப் பொத்தியபடி
அழைத்து வாருங்கள்
தேடியலைந்துகொண்டிருக்கும்
யாருடைய எலும்புக்கூடுகள்?

**04.06.2010**

# நிலக்கனவு

**01**

கைநழுவிக்கொண்டிருக்கிற நிலத்தில்
இறப்பர் கூடாரங்கள் நெருங்கி எரிய
நாள் முழுதும் தீயில் நனைந்துகொண்டிருக்கிறோம்
மலத்திலும் சோற்றிலும் வந்தமரும்
இலையான்களைத் துரத்த இயலாதிருக்கையில்
எங்கள் காணிகளுக்குச் செல்லும் வீதிகளைத்
திருப்பிவிடுகின்றனர்
எங்களை யாரோ துரத்துகின்றனர்
நாங்கள் வெட்டிய வீதிகள் மூடுண்டு கிடக்க
புதிய புதிய வீதிகள்
புதிய புதிய முகாங்களுக்குச் செல்கின்றன.

நாங்கள் மெலிந்துவிட்டோம்
நிலத்திற்காய்க் குரல்கள் அழுகின்றன.

பார்க்கக்கூடிய தூரத்தில்
குழந்தைகளின் காணிநிலம் தெரிகிறது
மிதிக்கப்பட்ட தென்னைகளின் பூக்களையும்
இளம் குருத்துகளையும் ஓலைகளையும்
நாம் பார்த்திருக்கக் களவாடிச் செல்கிறார்கள்.

கற்களையும் மணலையும் அள்ளிச் செல்லும் வண்டிகள்
நமக்கு முன்னால் ஆறுகின்றன
நாங்கள் மிகவும் வாடிப்போயிருக்கிறோம்.

**02**

மீண்டும் மீண்டும் நிலத்தில்
மிதிவெடிகள் முளைக்கின்றன
நிலா வராதிருக்கிற இரவில்
எங்கள் காணிகளில் எண்ணிக்கையற்ற
மிதிவெடிகள் முளைவிட்டிருக்கின்றன
மிதிவெடி மரமாகி முளைத்து
மிதிவெடிகள் காய்த்துக் கொட்டுமா என்று
குழந்தைகள் கேள்விகளை இரவில் கேட்கின்றனர்.

விமானங்கள் பறப்பதற்காகவும்
அவை வந்திறங்குவதற்காகவும்
பணம் அரைக்கும் ஆலைகள் திறப்பதற்காகவும்
நாங்கள் மீண்டும் மீண்டும் அகதிகளாக்கப்படுகிறோம்
இந்த நிலத்தை ஆக்கிரமிப்பாளர்களுக்கு
மிகவும் பிடித்திருக்கிறது
நிலத்தில் உறங்குவதற்காய் குழந்தைகள் அழுகின்றனர்.

இந்தக் கிராமங்களில் பிறந்ததற்காய்
வெயில் இறங்கியிருக்கும் வெளியில்
குழந்தைகள் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்
இந்த முகாம் தனது வாசலை
அகலமாய் திறந்தேயிருக்கிறது.

03

துப்பாக்கிகளோடான இராணுவங்களற்ற
முகாமின் வாசலின் ஊடாக
நாங்கள் வெளியேறி எங்கே செல்வது?
இந்த முகாம்களிலும் அந்த முகாம்களிலும்
திறக்கப்பட்டும் மூடப்பட்டும்
நிலத்திற்கான வழிகள் தடுக்கப்பட்டிருக்கின்றன
பிறந்த நிலத்தில் சிறைவைக்கப்பட்டவர்களாயிருக்க
எங்கள் காணிகள் மிகச் சமீபமாயிருக்கின்றன
மிதிவெடிகளைத் தூக்கி எறியும்
குழந்தைகள் தயாராக முன்னால் நிற்கின்றனர்
வீட்டுக்குச் செல்லத் துடிக்கும் இந்தக் குழந்தைகள்
குண்டுகளுக்கோ
துப்பாக்கிச் சூடுகளுக்கோ அஞ்சாதிருக்கின்றனர்
எந்த வாகனங்களிலும்
ஏறி நிலத்தைப் பெயர்ந்து செல்ல மறுக்கின்றனர்.

கனவு நிலத்தில் பேய்களின் நிழல் படர்ந்து
ஆக்கிரமிக்க முயல்கிறது
குழந்தைகளின் நிலக்கனவு தகிக்கிறது
நாம் பார்த்துக்கொண்டிருக்க
பூர்வீக நிலத்தை அள்ளிச் செல்லும்பொழுது
குழந்தைகளின் கண்களைப் பொத்திக்கொள்வதா?

# கொலையுண்ட நிலம்

*முழுநிலமும் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர்*
*கனவின் வேர்களை அழிப்பதற்காய்த் தேடப்படுகின்றன*
*ஷெல்கள் துளைத்த சுவர்களிலும்*
*குண்டுகள் தின்ற வீடுகளிலும்*
*விமானங்கள் சிதைத்த வெளிகளிலும்*
*காயங்களிலிருந்து முளைவிடுகிறது கனவு.*

*ஊனமாக்கப்பட்ட வெறும் நிலத்தில்*
*உடைத்துக் கொண்டு வரப்பட்ட*
*புத்தரின் சமாதிக் கற்கள் சுவர்களாகின்றன*
*பூவரசுகள் கொல்லப்பட்டு*
*அரச மரங்கள் நடப்படுகின்றன*
*கை நழுவிக் கரைந்து கசிந்துகொண்டிருக்கும் நிலத்தைத்*
*தூங்கும் குழந்தைகள்*
*கைகளில் நிரப்பி வைத்திருக்கின்றனர்*
*ஈரமாக்கப்பட்ட நிலம் எப்பொழுது காயும்?*

*வேலிகளும் சுவர்களும் கூரைகளும்*
*வேறு விதமாய் வளர்ந்து*
*நிலத்தைக் கொல்லுகின்றன*
*துவக்குகள் நிலம் மேயும் காலத்தில்*
*நிலத்திற்காய்ப் புதைந்த உயிர்கள்*
*மீண்டும் முளைக்கப் பார்க்கின்றன.*

**2011**

## பேய் கொன்ற நிலம்

மருதமரத்தின் நிழலில் பயங்கரத்தின் காலடிகள்
கனவைத் தின்றுகொண்டிருந்தன
நிலத்திற்கான துக்கத்தில் அழும் தாயின்
துயரக்குரல் தாழ்நிலத்தில் நிரம்பி வழிகிறது.

ஆற்றை வாய்க்கால்களை நாவல்மரங்களை
மருதமரங்களைப் பார்த்து
நம்முடன் பறவைகள் வளர்ந்தன
வீடுகளற்ற வெளியில் மருதமரங்களின் நிழல் விரிந்தன.

வாய்க்கால்களில் மண் தின்னும்
பெரு முதலைகள் திரிகின்றன
தாழ்நிலத்தின் பறவைகளைத் துரத்தும்
சிவப்பு உடையணிந்த வெருளி
உயிர் பெற்று வெருட்டுகிறது
பறவைகள் அலறியடித்துச் சிதறும்
சத்தங்களைக் கண்டு ஏங்குகின்றன குழந்தைகள்.

நாவல்மரத்தின் பூக்களை வெருளிகள்
அழித்துக் கொட்டுகின்றன
கிளைகளை உடைத்துத் தின்று மீண்டும்
சிரிக்கிறது சிவப்புடையணிந்த வெருளி.

நிலம் பற்றிய குழந்தைகளின் கனவு வார்த்தைகளை
மிதித்துக்கொண்டு
வயல்களில் நட்ட வெருளிகள்
அரசனுக்காக நிலத்தை வேட்டையாடின
தோணிகளைப் பாம்புகள் தின்பதை
மன்னித்த குழந்தைகள்
வெருளிகள் கூடாரங்களைத் தின்னும்பொழுது
தாங்காதழுதனர்.

பூவரசம் வேலிகளைப் பிடித்து
முறித்துக்கொண்டிருக்கிற
கால்போலத் தலை வைத்திருக்கிற
பேய்கள் தாழ்நிலத்தைக் கொன்றோம் கொன்றோம்
என்று கூச்சலிட்டுக் கொண்டாடும் இரவில்
அதிர்ந்து கேட்பாரற்றுக் கிடக்கிறது தாழ்நிலம்.

# கிழக்கில் கிடந்த பச்சைச் சூரியன்

குருதி படர்ந்த அந்த மணல் வெளியில் சனங்கள்
மிகத் தாமதமாகவே வெளியேறினர்
நள்ளிரவுவரையில்
துப்பாக்கியை நீட்டியிருந்த போராளியும்
கடைசி நம்பிக்கையை இழந்தான்
சனங்கள் பிணங்களின் வீதிகளில்
சென்றுகொண்டிருந்தனர்
புன்னகை இன்னும் முள்ளி வாய்க்காலில்
இருக்கிறது என்ற சகோதரி துயர் வழியும்
விரல்களின் ஊடே போகத் தொடங்குகிறாள்
வானம் பெரியளவில் இருளத் தொடங்கியது.

யாரும் நம்பாத முடிவுகள் வெளியாகிக்கொண்டிருந்தன
யாராலும் தாங்க முடியாத கண்ணீர்
பெருக்கெடுத்துக்கொண்டிருந்தது
மாபெரும் காயம் ஏற்பட்டுக்
குருதி வழிந்துகொண்டிருந்தது.

கட்டளைகள் ஓய்ந்து கோரிக்கைகள் சரிந்தன
வெள்ளைத்துணிகளில் வடியும்
வெறித்தனமாகப் பகிரப்பட்ட குருதி
எல்லோரையும் ஏமாற்றிக்கொண்டிருந்தது
எப்பொழுதும் வெடித்துச் சாம்பலாகும் வெளியில்
நீங்கள் யாரையோ விட்டு வந்திருக்கிறீர்கள்
ஆன்மாக்கள் அலையும் துயர் படிந்த கிடங்கில்
யாரோ சமராடிக்கொண்டிருந்தார்கள்
மைதானத்தைப் பாதுகாக்க
யாரோ இறுதிவரை முனைந்திருக்கிறார்கள்.

எல்லாத் துப்பாக்கிகளும் அடங்கியபொழுது
மௌனமாய் வைக்கப்பட்டபொழுது
என்ன மிஞ்சியிருந்தது?
சகோதரியே கைவிடப்பட்ட புன்னகை
கொல்லப்பட்டதை நீ பார்த்தாயா?

உனது நம்பிக்கை என்னவாகிப் போனது?
விரல்கள் உடைந்து விழும் என்று நம்பினாயா?
எல்லா தாகங்களையும் கனவின் பசியையும்
மணல் மூடிக்கொண்டது.

சூரியனைச் சரித்து போட்டிருந்தார்கள்
உயிர் வயலில் எல்லாக் கன்றுகளும் இறந்து கிடந்தன
ஒரு தாய் தன் குழந்தைகளை அணைத்தபடி
இறந்து கிடந்ததை நீ பார்த்திருப்பாயா?
கடைசியில் அங்கு ஏன்
நெருப்பெரிந்து இருள் பிறந்தது?
ஏன் வானம் இருண்டு மழை பொழிந்தது
அந்த மனிதனின் இறுதி வார்த்தைகள் என்ன?
வானம் என்ன சொல்லி அழுதுகொண்டிருந்தது?
பெருநிலம் உறைந்துபோயிருந்தது?
நமது நகரங்கள் உடைந்துபோயிருந்தன?
கடைசி மனிதன்
எங்கோ வெளியேறிச் சென்றிருக்கிறான்.

புதருக்கிடையில் குருதி பாய்ந்துகொண்டிருக்க
கபாலம் கொள்ளையடிக்கப்பட்டு
கிழக்கில் கிடந்தது பச்சைச் சூரியன்
எல்லோரது முகத்தையும்
குருதி சிவப்பாய் நனைத்து அபாயத்தைப் பூசியது
துடைத்தெறிய முடியாத மாபெரும் கனவு
பெருநிலத்தில் தங்கியிருக்க
இறுதி நிமிடத்தில்
இருதயங்கள் முள்ளுடைந்து நின்றன.

**(மே 18, 2009)**

# இடர்நிலம்

டெனிஷா என்னைப் பார்த்துக் கையசைக்காதே!
நிலத்திற்காய்த் தவிக்கிற உனது முகத்துயர்
கைவிடப்பட்ட சனங்களின் தோல்வியாய் வழிகிறது
நான் வெகு தூரத்திற்குச் செல்ல முடியாது
இன்றும் ஏதோ வழி மறிக்காததால்
உன்னைப் பார்க்க முடிந்தது
மீண்டும் மீண்டும் இடர் நிலத்தில் ஒலிக்கும்
உன் குரலை என்னால் கேட்க முடியாதிருக்கிறது.

அந்தத் தீர்வு நாள் வருகிறது
முட்கம்பிகளை உடைத்துக்கொண்டு
உன் காணிக்குள் செல்லப் போகிறாய்
வா! நிலத்தை அள்ளிச் செல்பவர்களின்
கைகளைத் தட்டிப் பறித்தெடுப்போம்!

பாம்புகளும் பூச்சி பூரான்களும்
உனது கூடாரத்தைச் சுற்றி வளைக்கின்றன
நான் ஒரு பயங்கரவாதி என்பதை
டெனிஷா நீ அறிவாயா?
இந்தப் பயங்கரவாதியால் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்
என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள்
ஆனாலும் நான் இந்தத் தெருக்களில் செல்லுவேன்
இடர்படிந்த நிலத்தில் துயருடனிருக்கிற
உன்போலான குழந்தைகளைப் பார்க்க வேண்டும்.

சனங்களை மீண்டும் பெயர்ந்துச் செல்லும்படி
அறிவிக்கப்பட்டபொழுது
டெனிஷா மறுத்தபடி அழுதாள்
இந்த நிலம் அரசனால் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது
காடுகளையும் மண்ணையும்
தின்றுகொண்டிருக்கும் அரசன்
இந்த நிலத்தின்மேலால் பறந்தபடியிருக்கிறான்.

குழந்தைகள் நிலமின்றி என்ன செய்யப் போகின்றனர்?
இன்னும் பறவைகள் திரும்பவில்லை
காவலின்றிக் கிடக்கும் நிலம்
யாரின் கையில் இருக்கிறது
டெனிஷா முதலான குழந்தைகள்
கேட்கத் தொடங்குகின்றனர்.

முன்பொரு காலத்தில் இந்த நிலம் எங்களிடமிருந்தது
குழந்தைகள் மகிழ்ந்திருந்தனர்
இந்த நிலத்தைப் போராளிகள் காவல் செய்தனர்.

நவீனப் படைகளின் தளபதியான புத்தர் படையெடுத்து
அரசமரங்களில் ஏறி
நிலத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும்பொழுது
சனங்களின் நிலத்தில்
அரசனின் நிழல் விழுந்துகொண்டிருக்கிறது
அரசன் கோயில்களைத் தின்கிறான்
அரசன் குளத்தைக் குடிக்கிறான்
அரசன் காடுகளை மேய்கிறான்
சாம்பல் கால்களை அணிந்து
நமது நகரங்களுக்கு வாளுடன் வந்து செல்கிறான்.

கொலை செய்து படைத்து வைத்திருக்கும்
என் முகத்தைப்
பல கோணங்களில் கமராக்களில்
அவர்கள் பிடித்து வைத்திருக்கிறார்கள்
எல்லா வார்த்தைகளும்
ஒரே தீர்ப்பைத்தான் பரிசளிக்கின்றன
நான் என்னை அழித்துக்கொண்டிருக்கிறேன்.

இந்தப் பயங்கரவாதி
இரவு நகரத்தில் இறங்கியிருந்தபொழுது
காதுகளில் உனது குரல் ஒலித்துக்கொண்டிருக்கிறது
உனது காணியை நோக்கி மிதிவெடிகளுக்குள்ளால்
ஊடறுத்துச் செல்ல உன்னுடன் நானும் வருகிறேன்
டெனிஷா உனக்கும் எனக்கும்
ஒரு கூடாரத்தைக்கூடத் தராதிருக்கிறார்கள்
அழகான வீடு என்பது எப்படியிருக்குமென
நீயோ நானோ அறிந்திருக்கவில்லை
கூடாரங்களும் மரங்களும் பற்றைகளும் மண்ணுமாய்க்
காலத்தைக் கழிக்கிறோம்
இடர்நிலத்தில்
இன்னும் ஏன் இப்படித் துயரம் நிகழ்கிறது?

# எனது நிலத்திற்காகப் பிரார்த்தியுங்கள்!

வீழ்ந்து துயரம் விளைந்து மூடிய நிலத்தைத்
துண்டாக்கிச் செல்ல வரும் கைகள்
விடும் கட்டளைகளால்
இன்றெமது நிலம் துடித்துக்கொண்டிருக்கிறது.

மீண்டும் ஒரு முறை பெயர்ந்து செல்லுமாறு
சனங்கள் பணிக்கப்பட்ட வேளையில்
குழந்தைகள் வெருண்டழுது
கைகளால் நிலத்தைத் தொடுகின்றனர்
ஆறுகள் நிலத்தை முத்தமிட்டுச் செல்லும் மழைநாளில்
ஈரமாகிச் செழித்தநிலம் கொதித்துக் கிடக்கிறது.

விரக்தியையும் ஏமாற்றத்தையும்
தவிர என்னிடம் எதுவுமில்லை
கொள்ளைக்காரர்கள் நம்பிக்கையை முறியடிக்கிறார்கள்
மீண்டும் மீண்டும் நிலத்தில்
எத்தனை கைகள் உதைக்கின்றன?
நிலத்தை அள்ளிச் செல்ல
எத்தனை விதிகளை எழுதுகின்றன?
பிறந்து கிடந்த நிலத்தைக் கொள்ளையடிக்க
எத்தனை வடிவங்கள் அலைகின்றன?

வல்லமை அழிந்து கடவுள்கள் கைவிட்ட
துயரைத் தின்று களிக்கும் காலத்தில்
எனது நிலத்திற்காய் பிரார்த்திப்பாயா தோழனே!

அமைதியற்று தெருக்களில் பறிக்கப்பட்ட நிலத்தின்
பறிக்கப்பட்ட நிரூபங்களுக்காக
அலையும் சனங்களிடம்
இல்லை துளிர்விடும் வார்த்தைகள்
குந்தியிருக்கும் நிலங்களைத் தின்று
சனங்களை வதைக்கும் காலம் நம்மை அச்சுறுத்துகிறது
வாழ்நிலக் கனவின் வாக்குமூலங்களை நிராகரித்து
நிலத்துடன் கொல்லப்படுகின்றனர் சனங்கள்.

கைவிடப்பட்ட சனங்களுக்காய்
நிலத்திற்காய் அழுதலையும் குழந்தைகளுக்காய்க்
குந்தியிருக்க ஒரு துண்டு நிலத்திற்காய்
பிரார்த்தனை செய் தோழி!
தாழ்நிலம் மேலுமாகத் தாழ்த்தப்படுகிறது
ஆறுகளுடன் மருதமரங்கள் துடித்தசைகின்றன.

தவிக்கும் தாயே உனது கண்ணீரும்
உன் பிள்ளைகளின் குருதியும்
இந்த ஆற்றில் பெருக்கெடுத்துச் செல்கின்றன
தாழ்நிலக் குழந்தைகளே நாம் எங்கு செல்வது?
குருதியும் கண்ணீரும் காயாத நிலத்தைத்
துயர் இன்னும் ஈரமாக்குகிறது.

தெருத் தெருவாக, கிராமம் கிராமமாக
நகரம் நகரமாக
நிலத்தை அள்ளிச் செல்பவர்களின்
அகலமான கைகள் நிலமீதலைகின்றன
தயவுசெய்து
எனது நிலத்திற்காகத் தொடர்ந்து பிரார்த்தியுங்கள்!

**நவம்பர் 2010**

## யாழ்நிலம்

**01**

குடா நிலத்தின் யாழோசை காயமுற்றொலிக்கிறது
நிலம் அள்ள வரும் கைகள்
யாழை இழுத்து பிய்த்துடைக்கின்றன
இந்த யாழ் உடைந்து போகட்டும்!
அல்லது எரிந்து சாம்பலாகட்டும்!!
என்று அறிவிக்கப்படாத பிரகடனங்களுடன்
யார் யாரோ வந்திறங்கி
யாழெடுத்து எறிகிறார்கள்
வானத்தைப் பிளந்து எட்டி முகங்களை மறைக்கும்
விளம்பரப் பலகைகளின் நிழலில்
அடுக்கிவிடப்பட்ட குளிரூட்டும் இருக்கைகளில்
அமர்ந்திருப்பவர்களின் கைகளிலுள்ள
கிண்ணங்களில் யாழின் சாம்பலிருக்கின்றன.

யாழ் நகரில் வேறொரு பாடலை யாரோ ஏற்றிவிட்டு
யாழோடு நிலத்தை
யாரோ சாம்பலோடு கிண்ணங்களில் போட்டுத்
தின்றுகொண்டிருக்கின்றனர்
நகரெங்கும் நிலமெங்கும்
உடைந்த யாழ்கள் கால்களுக்குள் மிதிபட
யாழ்நிலத்தில்
நரம்புகள் அறுந்தெழும் துடிப்போசையை
அன்றைய மாலைநேரம் அவர்கள் தின்றாடினர்.

**02**

தங்கள் பூர்வீக நிலங்களை அறிந்திராத
அகதிகளின் குழந்தைகள்
யாழறியாது புகையிரத வழியில் உறங்க
உச்ச பாதுகாப்பு வலயத்திலிருந்து
வெளியேற்றப்பட்டவர்கள்
வீடுகளற்று தெருக்கரையில்
தெருக் குழந்தைகளாய்க் காட்சியாயிருக்கிறார்கள்.

புகையிரத வண்டிகள் மீண்டும் வரப்போகின்றனவா?
நுழைய அனுமதிக்கப்படாத
வலயத்திற்குள் குருதிச்சதை படிந்த சக்கரங்களுடன்
செல்லப் போகின்றனவா?
நிலத்திற்காய் அலைபவர்களைத்
தங்கள் வழிகளுக்காகப் பலியெடுக்கப் போகின்றனவா?

புகையிரத வழியிலே பிறந்த
இந்தக் குழந்தைகள்
புகையிரதங்களையும் பார்த்ததில்லை
வீடுகளை அறிந்திராத
இந்தக் குழந்தைகள் ஒருநாளும் புன்னகைத்ததில்லை
தினசரி தங்கள் பாதங்களால்
புகையிரத வழியின் கற்களை
நொறுக்கிக் காயமடைகின்றனர்.

03

நமது குழந்தைகளின் கைகளில் பொம்மைகள் இல்லை
பொம்மை வெளியாகிப்போன
வாழ்வில் பிறக்கும் இந்தக் குழந்தைகள்
பொம்மைகளுக்குப் பதிலாகக்
குப்பைகளை அணைத்தபடி
யாழுக்குப் பதிலாகக்
கழிவுத் தகரங்களை வாசிக்கின்றனர்.

யாரும் எழுந்திரா காலையில் குப்பைப் பைகளுடன்
கூடாரங்களுக்கு வருகின்றனர்
எல்லாத் திசைகளிலிருந்தும் வரும்
குப்பைகள் பெருகும் நகரின் ஒதுக்குப்புறங்களில்
இலையான்களுடன் பழகிக்
குப்பைகளை நம்பிப் பிறந்து
குப்பைகளுடன் வளர்கின்றனர்.

குப்பைகளில் பொறுக்கிவந்த
புத்தகப் பைகளை மைதீர்ந்த பேனாக்களை
பொம்மைகளின் தலைகளை
என்னவென்று இவர்கள் கேட்கின்றனர்?
குப்பை வாசனையடிக்கிற இந்தக் குழந்தைகள்
முத்தமிடும்பொழுது
யாழ்நெஞ்சின் நரம்புகள் வெடிக்கின்றன.

**04**

சாம்பலை மூடிய சுவர்கள்
அதிர்வினால் உடைந்துபோய் விடுமோ?
மீண்டும் மீண்டும் இந்தப் புத்தகங்கள்மீது
அவர்கள் கற்களோடு
தீப்பந்தங்களை எறிய முற்படுகிறார்கள்
ஒட்டி உலர்ந்த சுவர்களில்
படிந்திருக்கிற சாம்பலைக் கிளற முற்படுகிறார்கள்
நமது நிலத்தைப்போல
எல்லா வகையிலும் காட்சிப் பொருளாக
புரிந்துகொள்ளாமலே இருக்கின்றன நமது புத்தகங்கள்
இந்தப் புத்தகங்களை விரிக்கும்பொழுது
சாம்பல் உதிர்ந்து கொட்டுகிறது
இவர்கள் எங்கள் சாம்பலையும் திருடிச் செல்கிறார்கள்
தாள்கள் மாற்றப்பட்ட நமது புத்தகங்களில்
புதிய கதைகள் எழுதப்பட்டு சேகரிக்கப்படுகின்றன.

இவர்களும் தீ மூட்டிய தடிகளுடன் வந்தார்கள்
சிரில் மாத்தியூவும்
காமினி திஸ்ஸநாயகேவும்
சாம்பல் வழியும் எரிந்த புத்தகங்களைத்
தின்றுழல்வதைப் பார்த்தனர்
அவர்களில் இன்றைய அரசர்களின்
முகங்களைக் கண்டனர்.

வெறிவழியும் நினைவுகளுடன்
புத்தகங்களைத் தூக்கி எறிந்தனர்
பிள்ளைகளுடன் கொல்லப்பட்ட நூல்களுக்காகவும்
துடிக்கும் தாய்மார்களை
இவர்கள் இன்னும் புரிவதாயில்லை
சத்தமில்லாது காதோரமாய் ஒலிக்கும்
நமது நிலச் சனங்களின் கதைகளைக்
கிழித்தெறிய கொடுங்கைகள்
நீண்டுகொண்டேயிருக்கின்றன
யாழ் நகரமெங்கும் அன்றைய மாலை
கிழிந்த எங்கள் புத்தகங்கள்
பறந்தலைந்து கடலில் படிந்தன.

புத்தகங்களின் உயிர்கொல்ல
இன்னும் கொடும் தீப்பறவைகள் வட்டமிடுகின்றன
நமது புத்தகங்களுக்கு எதிராகவும்
இவர்கள் எதையும் செய்யத் துணிகிறார்கள்.

05

துப்பாக்கிகளாலும் அதிகாரச் சீருடைகளாலும்
நாங்கள் துரத்தப்பட்ட பகுதியில்
யாரோ வந்தமர்கிறார்கள்
எங்களிடம் உள்ள இடர் நிரூபங்கள்
கொடுங்கைகளால் கிழித்தழிந்து போயிருக்கின்றன
கொண்டு வந்திருக்கிற குளிர்ந்த நிரூபங்கள்
இந்த நிலம் நமக்குச் சொந்தமில்லை என்கிறது.

தங்கள் பெரும் மலைகள் போதாது என்று
எங்கள் நிலத்தில் பங்கு கேட்டு
மண்ணுக்கடியில் இருக்கும் தொன்மைப்பொருட்களில்
புத்தரின் அரசமரக் கதைகள் எழுத முற்படுகின்றனர்.

கண் திறக்காது உறங்கும் புத்தரே
எங்கள் நகரமும் நாங்களும்
எரியூட்டப்படுகையிலாவது கண் திறந்திருக்கலாம்
அகலக்கால் வைத்திருக்கிற புத்தர் சிலைகள்
இராணுவச் சீருடையணிந்து
கண்களை இறுக மூடியபடி நகர்கின்றன
கண்களற்ற புத்தரே
யாழெடுத்த தெருவில் எல்லாம்
உமது புதல்வர்கள் துவக்கெடுத்து நிற்கின்றனர்
வாழ்நிலத்திற்காக அழும்
எங்களின் நிலத்தைத் துண்டாடிச் செல்லவும்
துகள்களை அள்ளித் தின்னவும்
உமது கொடும் கைகள் நீள்கின்றன.

கடலே இங்கு யார் வந்திறங்கினர்?
கடல் நகரச்சனங்களின் இடிந்த வீடுகளில்
யாராலும் படிக்கப்படாத
துயர்க்காலக் கதைகள் படிந்திருக்கின்றன
அந்நிய வேரோடும் மரங்களின் விதைகளை
நமது நிலத்தில் யார் தூவினார்கள்?
கடல் பெருங்காயத்திற்கு உள்ளாகியிருக்கிறது
யாழின் வாய் உடைந்து வார்த்தைகளற்றிருக்கிறது.

**2010**

# உள் நுழைய அஞ்சும் நகரின் தெருக்கள்

**01**

*யாரும் உள் நுழைய அஞ்சும் தெருக்கள்*
*எங்கள் நகரில் அதிகம் உள்ளன*
*பிரம்மாண்டமான நிகழ்வொன்றில்தான்*
*நகரத்திற்குச் செல்லும் அவசியமான தெருவில்*
*மறித்துக் கட்டப்பட்டிருந்த*
*இராணுவச் சங்கிலிகள் கழற்றப்பட்டன.*

*எப்பொழுதோ சனங்கள் வாழ்ந்ததற்கான*
*அடையாளங்களை*
*இன்னும் தன்னில் வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறது*
*நகரின் உட்புறமாய்ச் சிதைவடைந்திருக்கிற தெரு.*

*இந்தத் தெரு நான் பிறந்த காலம் முதல்*
*இன்றுவரை மூடப்பட்டிருந்தது*
*நான் எனது காலங்களை இழந்ததைப்போல*
*இந்தத் தெருவையும் இழந்திருக்கிறேன்.*

*தடைபோடப்பட்ட இந்தத் தெருவிலும்*
*நான் குழந்தைகளைத் தேடுகிறேன்*
*குழந்தைகள் வாசித்துப் பயப்படும் கதைகளை எல்லாம்*
*இந்தத் தெருவின் சுவர்களில் வாசிக்கிறேன்.*

இன்னும் மூடப்பட்டிருக்கிற நிலங்களுக்குச் செல்லும்
காலங்களுக்காக உயிரைப் பிடித்து வைத்திருக்கும்
வயது முதிர்ந்த என் தந்தையின் தாயிற்கு
நான் என்ன சொல்ல?
புற்கள் வளர்ந்து மூடிப்போயிருக்கும்
அவரின் கனவு நிரம்பிய
வீட்டுக்குள் அடியெடுத்து வைக்கும் இலட்சியத்தை
நீ எப்படிப் புரிந்து வைத்திருக்கிறாய்?
ஒரு பைத்தியக்கார கிழவியாய் மரித்துவிட்டுப்போ
என யாரோ சொல்லுவதாய்
அவர் புலம்பிக்கொண்டிருக்கிறார்
அவர் அலையத் தொடங்கியது எப்பொழுது?

காயங்களுடன் உள்ள நகரின் உள் பக்கத்தில்
இன்று அனுமதிக்கப்பட்ட தெருவில்
சென்றுகொண்டிருக்கிறேன்
வெடியேந்தி கடலின் ஆழத்தில்
உறங்கிக்கொண்டிருக்கும்
பெண்ணின் பெயர் பொறிக்கப்பட்ட
படகு ஒன்று தனித்து நிற்கிறது
கடலில் கரைந்துபோன அவளது சொற்களையும்
அதற்கிடையிலிருந்த கதைளையும் நான் வாசித்தேன்
யாரும் உள் நுழைய முடியாத தெருக்கள்
எங்கள் நகரில் அதிகம் உள்ளன
சிதைந்த நகரம் மாபெரும் எச்சரிக்கை ஒன்றை
விடுத்துக்கொண்டிருக்கிறது.

02

தெருக்களில் செல்ல அஞ்சுகின்றன குழந்தைகள்
திறபடாத தெருக்களைக் குறித்து
என் குழந்தைகள் எல்லாவற்றையும்
அறிந்து வைத்திருக்கிறார்கள்
ஒரு இராணுவ வாகனமும் அதன் சத்தங்களும் என்று
அதிகாரம் எப்பொழுதும்
பயணம் செய்துகொண்டிருக்கிற வழிகளில்
இந்தக் குழந்தைகள்
பாடசாலை செல்ல அஞ்சுகின்றனர்.

எங்கள் நகரின் எந்தத் தெருவும்
மிக நீளமாகச் செல்லுவதில்லை
அது ஆபத்தான முட்கம்பிகளில் முடிந்து போகலாம்
அனுமதிக்கப்படாத அறிவிப்பு பொருத்தப்பட்ட
வேலியில் நம்மை மோத வைக்கலாம்
முடிவில்
தண்டனைகளுக்கான முறைகளை
அது சொல்லியபடியிருக்கும்.

நாங்கள் ஆண்டுக்கணக்கில் காணாதிருந்த
தெருவை ஒரு நாள் திறந்து விட்டார்கள்
பசியின் குரூரம் உறைந்த நாட்களின்
தெருவுக்கான தவத்தை முடித்துக்கொண்டு
வீதியைப் பார்க்கிறோம்
சிதைவுகளைத் தவிர
ஒன்றையும் எங்கள் தெருவில் விட்டுவைக்கவில்லை
அழிவினால் மாற்றங்களுக்குள்ளான
இந்தத் தெருவுக்குள் நுழைய நாம் அஞ்சுகிறோம்
எல்லா அநியாயங்களையும்
மென்முறையிலான ஆக்கிரமிப்புக்களையும்
எதிர்ப்பதற்குத் திரணியற்ற
அவற்றை நிறுத்துவதற்கு வழியற்ற
ஆக்கிரமிப்பினால் அதன் அதிகாரத்தினால்
மூடுண்டகாலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும்
கிழவியின் உயிர் தனக்குள் சொல்லிக்கொள்கிறது
தெருவின் கதைகளை.

03

தெருக்களில் வடிந்த குருதி காய்ந்து
படிந்துபோயிருக்கிறது
தெருக்களில் கொல்லப்பட்ட உயிர்கள்
நசிந்து ஒட்டிப்போயுள்ளன
தெருக்களில் எழுதப்பட்ட கனவு வார்த்தைகள்
மிதிபட்டு உடைந்துபோயுள்ளன
நீ அறிவாய் இந்தத் தெருவில் நடப்பதற்காய்
நாம் இழந்தவற்றின் உறைந்துபோன கதைகளை.

இந்தக் குழந்தைகள் உலவ தெருக்களை அனுமதியுங்கள்
திறக்கப்பட்ட தெருக்களைக் குறித்து
நாம் கைகள் தட்டுகிறோம்
மூடப்பட்ட தெருக்களைத் திறந்து விடுங்கள்
தெருக்களை அள்ளிச் செல்லும் அபகரிப்பாளன்
எப்பொழுதும் திரிவதாகக்
குழந்தைகள் பயம்கொள்ளுகின்றனர்.

இந்த நகரம் சிதைவின் பின்னர்
ஆக்கிரமிப்பாளர்களினால் கைவிடப்பட்டிருக்கிறது
நகரத்தை ஆக்கிரமிப்பவர்கள்
தெருக்களை ஆக்கிரமிப்பவர்கள் அவற்றைத்
தமது அரண்களாக்கி
எம்மிடமிருந்து பறித்துவிடுகின்றனர்
அல்லது சிதைத்து கைவிடுகின்றனர்.

யாரும் உள் நுழைய முடியாத தெருக்கள்
எங்கள் நகரில் அதிகம் உள்ளன
இன்னும் உள் நுழைய அனுமதிக்கப்படாத நகரங்கள்
எங்கள் மண்ணில் அதிகம் உள்ளன.

**ஏப்பிரல் 2010**

# தலைநிலத்தில் மலைகளைத் தின்னும் பேய்கள்

*மலையும் சரிந்து கிடக்கிறது*
*நிலமும் சரிந்து கிடக்கிறது*
*கண் தளைத்த குளத்தில் முகம் கழுவ முடியாது*
*தாமரைகளில் பேய்கள் கண்மூடியிருக்கின்றன*
*கண்களற்று அலைந்து பேய்களில் மோதி விழுகிறோம்.*

*கோணமலையில் ஒரு பெரிய பேய் அமர்ந்திருக்கிறது*
*தலைநிலத்தை நாளும் தின்னும்படி*
*அரசன் பேய்களுக்கு உத்தரவிட்டிருக்கிறான்*
*மலைகளைத் தின்று களிக்கும் பேய்கள்*
*தலைநகரத்தில் நடனமாடும் காலத்தில்*
*அகோரம் தாங்க முடியாது வாடுகின்றன முகங்கள்.*

*முதிய ஊரில் யாருமில்லை*
*சர்வ அழகான ஊரிலிருந்து துரத்தப்பட்டவர்கள்*
*அகதி முகாங்களிலிருந்து இன்னும் திரும்பவில்லை*
*மலைகளின் ஊரில் மலைகளுக்கடியில்*
*சூழ்ச்சிகளுடன் பேய்கள் உறங்குகின்றன*
*மலைகளையும் நிலத்தையும்*
*அரித்து அரசனுக்கு அனுப்புகின்றன.*

*மலைகளின் மீது கால் வைத்தலையும்*
*புத்தரின் நிழலில் பௌத்தக் கொடிகள் பறக்கின்றன*
*சிங்களம் பூசப்படும் தெருக்களில்*
*ஊர்கள் கொல்லப்பட்டு*
*வேறு ஊர்களாக்கப்படுகின்றன*
*நமது முகங்கள் கண்களுடன் அழுகிப்போக*
*கண்தளைத்த குளத்தில் துவக்குகள் நீந்துகின்றன.*

பாடற்தலத்தைப் புத்த சரணங்கள் தின்னத் துடிக்க
துறைமுகத்தில் மலைகளைத் திருடும் கப்பல்கள்
சுற்றி வளைக்கின்றன
மகாவலி ஆற்றில்
பேய்கள் படகுகளில் வந்து குடியேறின
மாவிலாற்றில் எறியப்பட்ட நமதுயிர்கள்
கடலினுள் மூழ்கின.

கோட்டையின் கொடியைத் தின்றுகொண்டிருக்கும்
பேய்களின் கொடி
மாநிலத்தோடு தலைநிலத்தையும் மூடியிருக்கிறது
நரகங்களோடு தலைநகரத்தையும் மூடியிருக்கிறது
அடங்காக் கனவு பேய்களின் தீனியாக
ஆதிநிலத்துச் சனங்களுடன்
கொடியசைந்த மலைகளும் சரிந்தன
மாநிலமும் சரிந்தது.

**27.02.2011**

## குருதிக்கடல் நிலத்தின் பெருங்காற்று

பெருநிலத்தின் கடலில் கொட்டிய குருதி
உப்பு வயல்களில் தேங்கிக் கிடக்கிறது
வெடிகள் அதிர்ந்து புகை எழும்பி
உயிர் கரைந்த நாட்களில்
வேழினியின் தந்தை
உப்பு வயல்களில் உயிர் கொட்டி விறைத்துக் கிடந்தார்
வேழினியின் கண்களில் நீங்காதிருக்கின்றன
உப்பு வயல்களில் நகர்ந்த
வியர்வைகளும் குருதிகளும்.

நிலத்திற்காய்க் கொட்டிய குருதி
காயாமல் பிசுபிசுக்கிறது
வேழினியின் கண்களை நிலம் கொள்ளையிடும்
கைகள் குத்துகின்றன
அன்றெமது நிலத்திற்காய்
இதே தெருவில் பற்றைகளினூடே
வெடிகளைச் சுமந்து சென்றவர்கள் நகரும்பொழுது
குருதி பெருக்கெடுத்துக் கொட்டியது.

இன்றெம் நிலத்தில்
மிகக் கொடும் கைகள் விளைந்திருக்கின்றன
நிலம் அள்ளும் கைகளின் நகங்கள்
உப்பு வயல் கடல் நிலத்தில்
வளர்ந்து கண்களையும் முகத்தையும் குத்துகின்றன.

அன்றெமது கொடி பறந்த தடிகளில்
நிலத்துயரம் பறக்கிறது
வெடி சுமந்து சென்றவரின்
தாங்கியில் வேறுகதைகள் எழுதப்பட்டுள்ளன
உப்பு வயல்களில் முளைத்து
இன்னும் உயிரோ கிடந்து
துடிக்கிற வார்த்தைகள் பிடுங்கப்படுகின்றன.

நிலம் அள்ளித் தின்ற கைகள்
எப்பொழுதும் தெருவால் செல்பவர்களை
மிரட்டுகின்றன
கனவின் குருதி வயல்களில் உயிர்கள் மணக்கின்றன.

உப்பு வயல்களில் மீண்டும் மீண்டும்
முளைக்கின்றன வெடி சுமந்தவர்களின் முகங்கள்.

இந்தக் கடல் நிலம் அடிமையாக்கப்பட்டதை
வேழினி தாங்க முடியாது துடிக்கிறாள்
எப்பொழுதும் காதுகளை நிரப்பியபடியிருக்கும்
குருதிக்கடல் நிலத்தின் பெரும் உப்புக்காற்று
வெடி சுமந்தவர்களின்
கதைகளைக் கூவியபடியிருக்கிறது.

**2011**

## உறங்காதநிலம்

*நிலமும் உயிர்களும் உறக்கமற்றலைகிற*
*காலத்தில் நீ உறங்காதிருக்கிற இடத்தை நானறிவேன்*
*விதைகள் நிறைந்த நிலத்தை*
*நிலம் தின்னும் பெருங்கால்கள் மிதிக்கின்றன*
*உன்னைப்போலவே எல்லோரும்*
*உயிரோடு புதைக்கப்பட்டவர்கள்*
*அதனால் இந்த நிலம் இடையிடையே துடித்தசைகிறது*
*இரத்தமும் கண்ணீரும் கனவும் காதலும்*
*எல்லா இடங்களிலும் கசிகின்றன.*

*நீ உறங்காநிலத்தில் பேய்கள் பசியோடு அலைகின்றன*
*நிலத்தைக் கொள்ளையிட்டு வெட்டி*
*வண்டிகளில் ஏற்றிக்கொண்டு போகும் இரவில்*
*நீ என்ன செய்வாய்?*
*என்னைக் குறித்து நீ வைத்திருக்கும்*
*வார்த்தைகளை என்ன செய்வாய்?*
*உன் கூந்தல் முடிகள்*
*நிலத்தில் கலந்து எப்பொழுதும் பறக்கின்றன.*

உன்னை முத்தமிடத் துடிக்கும் தருணங்களில்
நீயும் நானும் கலந்த நிலத்தை முத்தமிடுகிறேன்
வாழ்நிலத்தின் கீழாய் நீ என்னைத் தேடி அலைகிறாய்
அங்கு தெருக்கள் இருக்கின்றனவா?
நமது பிரியத்தைப் பகிரும் வெளிகள் உள்ளனவா?
குருதியில் உறைந்திருக்கிற
நம் பெருங்கனவைப்போல
நமது காதலும் உயிரோடிருக்கிறது
நம் கனவைப்போல காதலுக்கும் மரணமில்லை
நான் உன்னை மணல்வெளிகளில் ஊடறுத்தும்
சிறுகடலில் மூழ்கியும் தேடிக்கொண்டிருக்கிறேன்.

தோல்வியின் பின்னரான பிரிவின் தனிமை
என்னைக் கொல்லும்
இருளால் நிரம்பிக்கொண்டிருக்கிறது
உன் முத்தங்களில்லாத காலத்தில்
எனது வானம் இருண்டு கிடக்கிறது
உன்னைக் குறித்து
நமது நகரமும் நிலமும்
என்னை ஏமாற்றிக்கொண்டிருக்கிறது
கனவு மக்களின் தாகங்களுடன்
நமது முத்தத்தின் ருசியையும் இந்த நிலமறியும்
உறங்காத நிலம் மீண்டும் முளைப்பேன் என்கிறது
கனவோடு காலத்தோடு பொழுதுகளுடன்
மீண்டும் நீ நமது காதல் நிலத்திலிருந்து முளைப்பாயா?

**2011**

# கொலைக்கால நகரத்தின் குறிப்புகள்

குழந்தைகள் உறங்காதிருக்கிற நள்ளிரவில்
வாழ்வை அச்சுறுத்துகிற
பின்னரும் ஒரு கொலைக் காலம்
நமக்கு முன்னால் தொங்கிக்கொண்டிருக்கிறது
நண்பா முகத்தை முழுமையாக அழித்துக்கொள்
சுய விபரங்களை அழித்துக்கொள்
நம்மைப் பின் தொடரும் பல மறைமுகங்களில்
இன்னும் இரத்தப்பசி குரூரமாய் விடாய்க்கிறது.

கனவைக் குறித்து எப்பொழுதெல்லாம் நாம்
அதிகம் பாடுகிறோமோ அப்பொழுதெல்லாம்
குரல்களைத் துப்பாக்கியர்கள் தின்றுவிடுகிறார்கள்
இரத்தக் களறியில் கிடக்கின்றன எம்முகங்கள்.

நேற்றெம் நகரில் யாரையோ
சதைத் துண்டங்களாகக் கொட்டியிருக்கிறார்கள்
தெருவில் திரியும் எல்லா வாகனங்களும்
இழுத்தெம்மைக் கொண்டுசெல்வதுபோலிருக்கிறது
மீண்டும் மோட்டார் சைக்கிள்கள் பயமுறுத்துகின்றன.

திறக்கப்பட்ட இந்தக் காலத்தின் பட்டியல்கள்
எந்தக் குழந்தைகளின் தந்தைகளை
அல்லது தாய்களைத் தின்னப் போகின்றன?
இந்தக் கொலையாளிகள் எங்களைப்போலிருக்கிறார்கள்
நாங்களே எங்களைக் கொலை செய்யும் காலம் என்று
தீர்ப்பெழுதப்படுகிறது
நாமே நம்மைக் கொலை செய்யும்பொழுது
இரத்தம் கொட்டுவதில்லை.

துப்பாக்கிகள் எதையும் எழுதக் கூடியவை
எங்கள் கவிதைகளை
எங்கள் இரத்தத்திலேயே தோய்த்தெறியக் கூடியவை.

கொலையினால் உயிரிழக்கும் குழந்தையைப்போல
அழகான கனவு இரத்தக்களறியில் கிடந்து துடிக்கிறது
அந்தக் காலத்தைவிடவும் இது பயங்கரமானது
வாழ்வும் கனவும் எவ்வளவு அழகானவை என்று
இந்தக் குழந்தைகள் காத்துக் கிடக்கிறார்கள்.

எப்பொழுதும் யாரும் எங்கும் உள் நுழைந்து
எதையும் எப்படியும் செய்து முடிக்கக்கூடியதாயிருக்கும்
காலத்திலிருக்கிறது நமது நிலம்
கொலை நகரத்தின்
வருடங்களும் நாட்களும் இறக்கின்றன.

நேற்றென் கனவில் குரூரத் துப்பாக்கிகள்
நெஞ்சைத் துளைத்துச் சென்றன
காலம் முழுக்கப் பசியுடன் வாழ்கிறோம்
எங்கள் கனவைக் கொல்லும் பாடலைக்
குழந்தைகள் பாட வைக்கப்படுகின்றனர்
எங்களிடம் ஒரு பாடல் இருந்தது
அந்நியப் பாடலோ
நமக்குள் நுழையவும் கேட்கவும் புரியவும் முடியாது
பாம்பைப்போல கழுத்தைச் சுற்றிச் சுருக்குகிறது.

நாமே நமது முகங்களை அழித்துக்கொள்வோம்
நாமே நமது குரல்களை உடைத்துக்கொள்வோம்
நண்பா துப்பாக்கிகள் நம் உயிரைத் தின்னக் கூடியவை
ஆனாலும், எப்பொழுதும்
நமக்குள் நெருப்பாய்த் தகிக்கும் கனவைப்போலிருக்கிற
நம் கவிதைகளை அவைகளால் கொல்ல முடியாது.

**01.01.2011**